www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

16

ஜனவரி – மாச் 2013

## பொது வேலைத்திட்டத்திற்கான முன்வைப்புக்கள்

## நினைவுகூர வேண்டிய ஒக்ற்றோபர்கள்

சி.கா. செந்திவேல், சோ. தேவராஜா

## புதிய ஜனநாயகப் புரட்சி

மோகன்

## இந்திய அமெரிக்க உறவும் சீன மிரட்டலும்

அஸ்வத்தாமா

## மனித இருப்பும் மனித அடையாளமும்

சி. சிவசேகரம்

## கவிதைகள்:

ச. சுதாகர், றே ஜேச்

# ஆசிரியர் தலையங்கம்

## தென்னாசிய ∴பாசிச நகர்வுகள்

தேசியவாதமும் இனவாதமும் மதவாதமும் ∴பாசிசத்திற்கு என்றும் பயனுள்ள கருவிகளே. ஒரு பெரும்பான்மைச் சமூகத்தின் மேலாதிக்கச் சிந்தனையை ∴பாசிசம் பயன்படுத்தினும், ∴பாசிசம் என்பது, வெறுமனே அடையாளப் பகைமையைப் பற்றியதல்ல. அதனுட் சுரண்டும் அதிகார வர்க்க நலன்கள் பொதிந்துள்ளன. வலதுசாரிச் சிந்தனை, தேசியவாதம், அதிகார அடுக்குமுறை, சமத்துவப் பகை, முதலாளியச் சார்பு, போர் முனைப்பு, அகச்சார்புச் சித்தாந்தம், நவீனத்துவ எதிர்ப்பு என்பவற்றை ∴பாசிசத்தின் தலையாய பண்புகளென ஐரோப்பிய மாக்சியர்கள் கொள்வர். அவற்றுள் முதலாளியச் சார்பு அடிப்படையானது.

இரண்டாம் உலகப் போரின் பின், ஐரோப்பிய மக்கள் ∴பாசிசத்தை அறிந்து கொண்டனர். எனவே, சில முன்னேறிய முதலாளிய நாடுகளிற், ∴பாசிசம் போருக்கு முன் பெற்ற பெரும்பான்மை ஆதரவைப் போருக்குப் பின் பெறவில்லை. எனினும் முதலாளிய வல்லரசுகளின் ஆசிகளுடன் 1970களின் இடைப்பகுதி வரை ∴பாசிச சர்வாதிகாரிகள் ஸ்பெயினையும் போர்த்துக்கலையும் ஆண்டனர். இரண்டாம் உலகப் போரையடுத்த கிரேக்க உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்ட்டுக்களை முறியடித்து ஒரு தசாப்தம் கழிய அங்கு ∴பாசிச ராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. மக்கள் எதிர்ப்பின் பயனாக ஐரோப்பிய ∴பாசிச ஆட்சிகள் விழுந்தபோதும் மேலை முதலாளியத்தின் தெரிவுகளில் ஒன்றாக ∴பாசிசம் தொடர்ந்தும் இருந்து வருகிறது.

1980கள் தொட்டு, ஐரோப்பிய ∴பாசிசம், தன்னை வெளிப்படையாக அதிகாரத்தின் மையத்திற் அடையாளப்படுத்தாமல், அரசாங்கத்தின் மீது அழுத்தஞ் செலுத்துவதுடன் சிறுபான்மையினரைத் தொடர்ச்சியாக இலக்கு வைத்து அச்சுறுத்தும் நவ ∴பாசிசமாக இயங்கிவருகிறது. பொருளாதார நெருக்கடிகளின் போது, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பிச், சமூகத்தின் உள்ளேயே ஒரு எதிரியைக் கட்டமைத்துப் பிரச்சனைக்கான பழியைப் அந்த எதிரியின் மீது சுமத்த இனவாதம் பயன்பட்டுள்ளது. கொலனியத்துடன் ஒட்டிப் பிறந்த நிறவாதமும் மேற்குலகப் பண்பாட்டின் மேம்பாடு பற்றிய கற்பிதங்களும் ∴பாசிசத்துக்குப் பயன்படுவன. இன்று வரை, நவ ∴பாசிசம் அவற்றைப் பயன்படுத்திவருகிறது.

முதலாளிய, சீர்திருத்தவாதக் கட்சிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து, மக்களிடையே புரட்சிகர இடதுசாரிப் போக்கு வலுப்படும் நிலைமைகளில், அதற்கு மாற்றாக முதலாளியம் நவ ∴பாசிசத்தை

முன்னிறுத்தும் என்பதை கிரேக்கத்தில் ஒரு மாற்று இடதுசாரி அணி சென்ற ஆண்டு துரிதமாக வளர்ந்தபோது "தங்க விடியல் (Golden Dawn)" என்ற நவ ∴பாசிசக்கட்சியும் எழுந்தமை நினைவூட்டியது.

தொடக்கத்திற் குறிப்பிட்ட ∴பாசிசப் பண்புகளையுடைய சர்வாதிகார ஆட்சிகள் பல அமெரிக்க ஆதரவுடன் ராணுவச் சதிப்புரட்சிகள் மூலம் தென்னமெரிக்க நாடுகளில் 1970களிலும் 1980களிலும் உருப்பெற்றன. சோவியத் ஒன்றியத்தின் சரிவின் பின், கம்யூனிச மிரட்டல் என்பது சர்வாதிகார ஆட்சிகளை நியாயப்படுத்தப் பயனற்றுவிட்டது. மக்களின் கடும் வெறுப்பைச் சந்தித்த அவ் ஆட்சிகள் 1990களில் அடுத்தடுத்து வீழ்ந்தாலும், அவை ஏற்படுத்திய அழிவு பெரிது.

இன்று ஆசியாவிலே ஒரு ∴பாஸிஸ அலை எழுகிறது. இரண்டாம் உலகப் போரின் பின் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்களால் ஆட்சிக்கு வந்த ∴பாஸிஸவாதிகளைப் போலன்றித், தென்னாசிய ∴பாஸிஸவாதிகள் 1930களின் இத்தாலிய, ஜேர்மனிய ∴பாஸிஸவாதிகளைப் போல ஒரு வெகுசன ஆதரவுத் தளத்தை எழுப்பி அதனூடு ஆட்சியில் அமர முயலுகின்றனர். ஆட்சிக்கு வர உடனடி வாய்ப்பில்லாத போது, மதவாதப் பிரசார மூலமும் மதவாத வன்முறை மூலமும் தமது ஒடுக்குமுறைத் திட்டங்கட்கு உடன்படுமாறு ஆட்சியாளர்களை வற்புறுத்துகின்றனர்.

மதஞ்சார்ந்த தேசியமும் தேச அடையாளமும் தேசப்பற்றும், அத் தேசிய அடையாளமற்ற சக சமூகத்தினரைப் பகையாகக் காட்டலும் தென்னாசிய ∴பாஸிஸத்தின் தேவைகளாயுள்ளன. கொலனி ஆட்சிகட்கு எதிரான எழுச்சிகளின் தொடக்க நிலையில் மக்களை அணிதிரட்ட மதம் பயன்பட்டபோதும், அவ்வெதிர்ப்பு விடுதலைக் கோரிக்கையாகி மக்கள் இயக்கங்களாகிய சூழ்நிலையிற், கடும் மதவாதச் சக்திகள், நேரடிக் கொலனிய எதிர்ப்பிலிருந்து விலகிப், பிற இன, மத அடையாளங் கொண்டோருடனான போட்டியிற் தமது கவனத்தைக் குவித்தன. அப் போட்டியிற் பொதிந்திருந்த முதலாளிய-பிரபுத்துவ வர்க்க நலன்கள், கொலனி ஆட்சியாளருடன் ஒத்துழைக்குமாறு அவர்களைத் தூண்டின.

தென்னாசியாவில் எழுந்துள்ள இந்துத்துவ, இஸ்லாமிய, பௌத்த மதவாத அரசியற் சக்திகள் இந்தியா, பாக்கிஸ்தான், பங்ளாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளிற் பேரினவாத அரசியலை முன்னெடுக்கின்றன. தம் உடனடிச் சூழல்களில் இலக்குவைக்க வாய்ப்பான சிறுபான்மை யினரை அவை வெளிப்படையாக இலக்கு வைக்கின்றன. எனினும், அவற்றின் முக்கியமான பகைவர்கள் மதச்சார்பற்ற அரசியலை முன்னெடுப்போரும் இடதுசாரிகளுமேயாவர்.

ஏகாதிபத்தியமும் வலதுசாரி மதவாதமும் வர்க்க நலன்களில் ஒன்றுபடுவதால் அவற்றிடையே நட்புண்டு. குறிப்பான சில முரண்பாடுகள்

இருப்பினும், இந்திய இந்துத்துவவாதிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடி முகவர்களாகவும் இடதுசாரிகள் பழங்குடிகள் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்போரைப் பொது எதிரிகளாகக் கொண்டும் உள்ளனர். பாக்கிஸ்தான், பங்ளாதேஷ் அரசுகளுடனான மோதலில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஏகாதிபத்தியத்துடன் முரண்பட்டாலும், சவூதி அராபியத் தொடர்புகள் அவர்களின் ஏகாதிபத்தியப் பகையைத் தணிக்கிறது. இடதுசாரி விரோதம் அவர்களை ஏகாதிபத்தியத்துக்கு நெருக்குகிறது. சுன்னி-ஷியா முஸ்லிம்களிடையே திட்டமிட்டுப் பகையை வளர்க்கும் அமெரிக்க-சவூதி சூழ்ச்சியிலும் அவை பங்காளிகளாக உள்ளன.

தேரவாத பௌத்த மதவாதம் முதலிற் சிங்களப் பேரினவாதத்தினூடு தலைநீட்டியபோதும், பிக்குக்களின் அமைப்புக்களும் பௌத்த மதவாத அமைப்புக்ளும் பலகாலமாக இருந்துவந்த போதும், சிஹள உருமயவின் தோற்றத்துடனேயே சிங்கள பௌத்த அரசியல் வெளிப்படையாகத் தோன்றியது. அதன் தொடர்ச்சியான ஜாதிக ஹெல உருமய, தேர்தலில் பெற்ற சிறு வெற்றியைத் தொடர்ந்து தக்கவைக்கத் தவறியபோதும், மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் அதன் செல்லாக்கைப் புறக்கணிக்க இயலாது. பௌத்த ஃபாசிசத்தின் மையமாக ஜாதிக ஹெல உருமய உள்ளது. தமிழ்த் தேசியத்திற்கு எதிரான போர்முனைப்பின் மூலம் எழுச்சிபெற்ற அதன் பௌத்த ஃபாசிசம் இன்று நன்கு கட்டமைக்கப்பட்ட பௌத்த ஃபாசிசக் குண்டர் படைகளாக வலுப்பெற்று வருகிறது. முஸ்லிம்கள் அதன் பகிரங்க இலக்காக உள்ளனர். அதன் முஸ்லிம் விரோத முன்னெடுப்புக்கட்கு அரச நிறுவன ஆதரவுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் மீது மேற்குலகின் போர்க்குற்ற நெருக்குவாரங்களை அது வெறுத்தலும் தனது எதிர்காலம் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவிற் தங்கியுள்ளமையை அது அறியும். ஆட்சிக் கவிழ்ப்பினூடோ அது இல்லாமலோ இலங்கையில் ஒரு சிங்கள பௌத்த அடக்குமுறை ஆட்சி அமையும் அபாயம் நிசமானது.

தென்னாசியாவில் உடனடியான ஃபாசிச மிரட்டலை இலங்கை மிகவும் எதிர்நோக்கும் நிலையில் மக்களை அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே ஃபாசிசத்தை முறியடிக்க இயலும். எனவே இலங்கையின் ஜனநாயக, முற்போக்கு. இடதுசாரிச் சக்திகளின், குறிப்பாகச் சிங்கள இடதுசாரிச் சக்திகளின், பொறுப்புப் பெரியது. மகிந்த சிந்தனை ஆட்சியுடன் நட்புப் பேணி அதன் ஃபாசிச முனைப்பை மாற்ற இயலாது. எனவே ஃபாசிச மிரட்டலைத் தடுப்பதை மகிந்த சிந்தனை அரசாங்க எதிர்ப்பிலிருந்து பிரிக்க இயலாது என்பதை அனைத்து இடதுசாரிகளும் உணரவேண்டும்.

*****

# புதிய-ஜனநாயக மாக்சிச-லெனிசக் கட்சியின் பொது வேலைத்திட்டத்திற்கான முன்வைப்புகள்

1. இலங்கையில் தரகு முதலாளித்துவ சிங்கள பௌத்த மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினரே ஆளும் தரப்பினராக இருந்து வருகின்றனர். சுதந்திரம் என்பதற்குச் சிலகாலம் முன்பிருந்தும் அதற்குப் பின்பும் அவர்களே இலங்கை அரசியலில் ஆதிக்கமும் அதிகாரமும் செலுத்தி வந்துள்ளனர். அவர்களது விருப்புவெறுப்பிற்கு ஏற்ற வாறான ஒரு அரசியல் அமைப்பே தொடர்ந்தும் இருந்து வருகிறது. அவ் அரசியல் அமைப்பின் கீழ், நாட்டின் சகல இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களும் தேசிய இனங்களும் ஒடுக்குமுறை கட்கு உள்ளாகி வருகின்றனர். இத்தகைய ஒடுக்குமுறையின் இருப்பிற்கும் அதன் தொடர்ச்சிக்கும் ஏதுவாகப், பழமைவாத மதப் பண்பாட்டு கருத்தியல் தளங்கள் கருவிகளாகப் பாவிக்கப்படுகின்றன. பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அதன் வரலாற்று மேன்மையுடன் தொடர்புபடுத்தித் தமது ஆளும்வர்க்க நிலைப்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இதனூடாகவே கடந்த நூற்றாண்டிலும் இப்போதும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தமது அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு முன்னெடுப்புகளைச் செயற்படுத்தி வருகின்றன.

2. இலங்கையில் சிங்கள பௌத்தபேரினவாத ஒடுக்குமுறை உச்ச மடைந்துள்ள இன்றைய நிலையில் அதனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆளும் வர்க்கச் சக்திகளும் அவற்றுடன் இணைந்துநிற்கும் ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்கத் தரப்புகளுமே தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய ஒடுக்கப்படும்

தேசிய இனங்களினதும் அனைத்து உழைக்கும் மக்களினதும் பொது எதிரிகள் ஆவர்.

3. தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இனங்களினதும் விடுதலைக்கும் இருப்புக்கும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சியே தீர்வாகும். வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தில் சகல அதிகாரங்களுங் கொண்ட முழுமையான சுயாட்சியை உருவாக்குவதே சுயாட்சியின் அடிப்படை யாகும் இச் சுயாட்சிப் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களுக்குச் சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும். அவ்வாறே சுமார் இருநூறு வருட வரலாற்றைக் கொண்ட மலையகத் தமிழ் மக்களுக்கு அவர்கள் செறிந்து வாழும் பகுதிகளை உள்ளடக்கிய சுயாட்சி அமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

4. இத்தகைய சுயாட்சியை வென்றெடுப்பது இலகுவாக இருக்க முடியாது. எனவே பலமான பொது எதிரிக்கு மாறாக ஐக்கியப்படக் கூடிய அனைத்துச் சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் மூலமே தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் உரிமைகளைச் சுயாட்சியின் ஊடாக வென்றெடுத்து நிலைநிறுத்த முடியும்.

5. அதன் வழியில் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் மக்க ளுக்கு அதன் அடிப்படைகளையும் சுயநிர்ணய உரிமை பற்றியும் சுயாட்சிக் கோரிக்கை சம்மந்தமாகவும் தெளிவுபடுத்தி விளங்கச் செய்தல் வேண்டும். இதன் மூலம் மக்களை அரசியல் விழிப்புணர் வுக்கு உள்ளாக்கி அரசியல்மயப்படுத்த வேண்டும். அதன்மூலம், அரசியலிற் பங்குகொள்ளும் பரந்துபட்ட மக்கள்திரளை அணிதிரட்ட முடியும்.

6. அதேவேளை, தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் சாதியம், பெண்ணடிமை, வர்க்க வேறுபாடு, பிரதேசவாதம், மதவாதம் போன்ற வற்றின் அடிப்படையில் ஒடுக்குதல்கட்கு உள்ளான மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் உள்வாங்கவேண்டும் இதிற் குறிப்பாக சாதியத்தினதும்

தீண்டாமையினதும் ஒடுக்குதல்கட்கும் கொடுமைகட்கும் உள்ளான தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ்த் தேசிய இனத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் என்பது எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். அதேபோன்று, பெண்களின் தொகை எப்பொழுதும் அரைக்கரை வாசியாக உள்ளனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் கவனத் திற்கொள்ள வேண்டியவையாகும். இவற்றின் மூலமே தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையானது அனைத்துத் தமிழ் மக்களினதும் விடுதலையாக இருக்கமுடியும்.

7. தமிழ் மக்கள் தமது சுயாட்சிக்கான போராட்டத்திற் பலமான பேரின வாத ஆளும்தரப்பினரை எதிர்கொள்ளவேண்டியுள்ளனர். அதே ஆளும் வர்க்கச் சக்திகளே பரந்துபட்ட உழைக்கும் சிங்கள மக்களையும் வர்க்கரீதியில் ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர். அத்தகைய சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களின் நியாயப்பாடுகளை எடுத்து விளக்கி அவர்களது ஆதரவையும் ஐக்கியத்தையும் பெற வேண்டும். அதன் மூலம் எமது நியாயமான போராட்டத்திற்கு வலுச் சேர்க்க முடிவதுடன் பேரினவாதத்தைப் பலவீனமாக்கவும் முடியும்.

8. முஸ்லிம் மக்கள் தமது தாய்மொழியைத் தமிழாகக்கொண்டு பாரம் பரியமாகப் பல பிரதேசங்களில் தமிழ் மக்களோடு வாழ்ந்து வருகின் றார்கள். அதேவேளை, மத, பண்பாட்டு அடிப்படையில் அவர்க ளுடைய அடையாளங்களும் தனித்துவங்களும் இருந்து வருவதால் அவர்கள் செறிந்துவாழும் பிரதேசங்கட்குச் சுயாட்சி உள்ளமைப்பு கட்கான உறுதியையும் உத்தரவாதத்தையும் நாம் வழங்க வேண்டும். அதன்மூலம் அவர்களையும் நமது போராட்டத்தில் ஐக்கியப்படுத்த முடியும்.

9. சுயாட்சியை வென்றெடுக்கும் எமது போராட்டத்தில் ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க சக்திகள் உதவுவார்கள் என்றோ வழி காட்டு வார்கள் என்றோ எதிர்பார்க்கமுடியாது, எதிர்பார்க்கவும் கூடாது. ஏனெனில் அவர்கள் தங்களுடைய பொருளாதார அரசியல் இராணுவ நலன்களிலேயே அக்கறையாக இருந்து வருகிறார்கள் அதனாலேயே கடந்த காலத்தில் அவர்களிடம் இருந்து தமிழ்

மக்கள் எதனையும் பெறமுடியவில்லை. மாறாக உயிரிழப்புகளையும் உடைமையிழப் புகளையும் இரத்தப் பெருக்குக்களையுமே பெறமுடிந்தது. இவற்றின் அனுபவங்களையும் பட்டறிவுகளையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. எமக்கான அடிப்படைப் பலமும் நம்பிக்கையும் மக்கள் மீதானதாகவே இருத்தல் வேண்டும்.

10. சுயாட்சிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு எவ்வகையிலும் பழமைவாதச் சிந்தனை அடிப்படையில் பயணிக்க முடியாது. கடந்தகாலத்தில் இணக்க அரசியல் பாராளுமன்றப் பேரம்பேசும் அரசியல் சாத்வீக எதிர்ப்பு அரசியல் ஆயுதப்போராட்டம் என்பன வற்றின் அனுபவங்களையும் பட்டறிவுகளையும் பெற்று மக்களுக்கு ஜனநாயகம், சுதந்திரம், விடுதலை என்பனவற்றின் மாண்பினை அரசியல் ரீதியில் தெளிவுபடுத்தவேண்டும் கடந்தகாலத்தின் அரசியல் தலைமைகள் வெற்றிபெறமுடியாது போனமைக்கான காரண காரியங் கள் நேர்மையான அரசியல் அனுகுமுறைகள் மூலம் கண்டறிவது தேவையானதாகும். அதன்மூலம், தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர் வுறவும் வெகுஜனமார்க்கத்தில் அணிதிரளவுமான மாற்று அரசியலை நாம் முன்னெடுக்கவேண்டும். அம் மாற்று அரசியலானது பழமை வாதத் தமிழ்த் தேசியத்திற்குப் பதிலான முற்போக்குத் தமிழ்த் தேசியமாக அமைவது அவசியமானதாகும். அத்தகைய சூழலை உருவாக்குவதன் மூலமே விரக்தியும் வெறுப்பும் அச்சமும் கொண்ட நிலையில் இருந்துவரும் தமிழ் மக்களைக், குறிப்பாக இளந் தலைமுறையினரைப், புதிய மாற்று அரசியல் தலைமையின் ஊடாக நம்பிக்கையுடன் வழிநடத்திச் செல்லமுடியும்.

*யாழ்ப்பாணம், 18.12.2012*

*****

# நினைவுகூர வேண்டிய ஒக்றோபர்கள் இரண்டு

[*1916 ஒக்ற்றோபர் புரட்சியும் 1966 ஒக்ற்றோபர் எழுச்சியும் எனும் தலைப்பில் 28.10.2012 அன்று யாழ்நகரில் இடம்பெற்ற பகிரங்கக் கருத்துரையில் புதிய ஜனநாயக மாசிச லெனிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் ஆற்றிய உரையினதும் நிகழ்விற்குத் தலைமைதாங்கிய கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் சட்டத்தரணி தோழர் சோ.தேவராஜாவின் தலைமையுரையினதும் தொகுப்புக்கள் கீழுள்ளன.*]

## தோழர் செந்திவேல் ஆற்றிய உரைப் பகுதிகள்

தொழிலாளர்கள் மீதும் விவசாயிகள் மீதும் பிற உழைக்கும் மக்கள் மீதுமான கொடூரச் சுரண்டலுக்கும் ஏதேச்சதிகார அடக்கு முறைகளுக்கு மட்டுமன்றித் தேசிய இனங்ககளின் சிறைச்சாலையாக விளங்கிய ரஷ்யப் பேரினவாத ஒடுக்குமுறைக்கும் எதிராக வெடித்தெழுந்து வெற்றி பெற்றதே மாமேதை லெனினின் தலைமையிலான 1917 ஒக்ற்றோபர் சோசலிசப் புரட்சியாகும் அதிலிருந்து எழுந்த அதிர்வலைகள் இன்றுவரை உலகம் முழுதும் எதிரொலித்தபடி இருந்து வருகின்றன. அதன் காரணமாகவே, அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடிவரும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒக்ற்றோபர் புரட்சி காட்டிய புரட்சிகரப் பாதையில் போராடி வருகிறார்கள். அதன் வழியிலேயே 1966 ஒக்ற்றோபர் 21 எழுச்சி வடபுலத்திற் சாதியத் தீண்டாமையை எதிர்த்து நின்ற புரட்சிகரப் போராட்டங்களாகியது. அன்றைய போராட்டங்களே தமிழர் பழமைவாதத்தால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த தீண்டாமையை முறியடித்து ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்தின.

1917இல் சோசலிசப் புரட்சி வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் ரஷ்யக் கம்யூனிக்கட்சியின் தலைமையில் வெற்றி பெற்று ஜார் மன்னனின் ஏதேச்சதிகாரத்தை துடைத்தெறிந்து அந்த மண்ணிலே சோசலிசத்தை நிலைநிறுத்தியது. அதே வர்க்கப் போரட்டப் பாதையில் இலங்கையில் புரட்சிகர கம்யூனிட் கட்சி தலைமை தாங்கிப் பழமைவாதத்தால் இறுகி நின்ற வடபுலத்து மண்ணிலே சாதியை தீண்டாமைக்கு எதிராகப் போராடி தீண்டாமைக் கொடுமையை முடியடித்தது. அதன்மூலம் தமிழ் மக்கள் மத்தியில் சமத்துவத்தையும் சமூக நீதியையும் ஜனநாயகத்தையும் வென்று நிலைநிறுத்தியது. கடந்த நுற்றாண்டில் வரலாற்றுத் தடம் பதித்த இரண்டு நிகழ்வுகளான இப் புரட்சியினதும் எழுச்சியினதும் அனுபவங்கள் இன்றைய இலங்கைச் சூழலில் ஆழ்ந்து நோக்கவும் அவற்றின் வழியிற் சிந்தித்துச் செயற்படவும் துணிய வேண்டியவையாகும்

இன்று நமது நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் முற்றுமுழுதான மக்கள் விரோதப் போக்குகள் வளர்க்கபபடுகின்றன. மகிந்த சிந்தனை தலைமை தாங்கும் தரகு முதலாளித்துவ பேரினவாத எதேச்சதிகார ஆட்சி அதிகாரமே சகலவற்றையும் தீர்மானிப்பதுடனன்றி பாசிச சர்வாதிகாரமாகவும் கோலோச்சி வருவதைக் காண முடிகிறது. தேசியவாதம் பாசிசத்திற்கு இட்டு செல்லுமென்ற வரலாற்றுப் பட்டறிவின் யதார்த்தத்தை இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று அடையாளம் காட்டிநிற்கிறது இப் பேரினவாதம் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சிநிரலுடன் கைகோத்துச் செல்கிறது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்தே எதிர்வரும் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப் படவுள்ளது என்றால் நாடு எங்கே இழுத்துச் செல்லப்படுகிறது என விவரிக்க அவசியம் இல்லை. எனவே தெற்கில் சிங்கள உழைக்கும் மக்கள் மீதான பொருளாதாரச் சுமை ஏற்றல்கட்கும் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகட்கும் மறைப்புக்கட்டிக் கொள்ளவே தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மீது பகையான பேரினவாதப் பேச்சுக்களும் நடமுறைச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றின் மூலம் தமிழ் மக்களை ஒடுக்கவும் சிங்கள மக்களைத் திசைதிருப்பி வைத்திருக்கவும் குடும்ப அதிகாரத்தை தொடர்ந்தும் தமது கைகளில் வைத்திருக்கவும் முடிகிறதே தவிர, நாட்டையும் மக்களையும் சுபீட்சமான பாதையில் இட்டுச் செல்ல இயலாது என்பதே

உண்மையாகும். அதனையே அமெரிக்க உலக மேலாதிக்கவாதிகளும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கச் சக்திகளும் விரும்புகின்றன. அதற்கான காய்நகர்த்தல்களையே அவர்கள் இலங்கையில் மேற்கொண்டு வருகின்றார்கள். மறைக்கப்படும் இத்தகைய உண்மைகளைப் புரிந்து கொள்ளாது தெற்கின் சிங்கள மக்களும் வடக்கு-கிழக்கு, மலையகத்தின் தமிழ், முஸ்லிம் மக்களும் தம்மைப் பிணைத்துள்ளண வலிமை மிகுந்த கொடூர அடக்குமுறைச் சங்கிலிகளை உடைத்தெறிய முடியாது. இந் நிலையிலேயே 96 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த ஒக்றோபர் புரட்சியில் இருந்தும் 46 ஆண்டுகட்கு முன்பு இடம்பெற்ற ஒக்றோபர் 21 எழுச்சியில் இருந்தும் வரலாற்று அனுபவப் பாடங்கள் பெற்று முன்செல்ல வேண்டிய வரலாற்றுத் தேவை எம்முன்னால் உள்ளது.

## தோழர் தேவராஜா ஆற்றிய உரைப் பகுதிகள்

இலங்கையர்களாகிய நாம் இன்று தரகு முதலாளித்துவத்தாலும் பேரினவாத ஒடுக்குமுறைகளாலும் ஏகாதிபத்திய உலகமயமாதலாலும் இறுக்கி அமுக்கப்பட்டோராக இருந்து வருகின்றோம். குறிப்பாகப் பேரினவாத ஒடுக்குமுறையானது தேசிய இனங்களை ஒடுக்கிவருவது முன் என்றும் இல்லாதவாறு வேகமடைந்துள்ளது. கடந்த நூற்றாண்டிலுஞ் சரி இப்பொழுதுஞ் சரி தமிழ்த் தேசியவாதத்தால் அதை எதிர்கொண்டு முறியடிக்க முடியவில்லை. அகிம்சைப் போராட்டங்களாலும் பின்பு ஆயுதப் போராட்டங்களாலும் எதையுமே சாதிக்க இயலவில்லை. அது ஏன் என்பதைப் பற்றிய மீள் பரிசீலனைக்கோ மறு மதிப்பீட்டுக்கோ எந்தவொரு தமிழ்த் தேசியவாதத் தலைமையும் தயாராக இல்லாத துரதிர்ஷ்ட நிலை நீடித்து வருகிறது.

இவ்வாறான இன்றைய சூழலிலே ஒக்றோபர் புரட்சியினதும் ஒக்றோபர் 21 எழுச்சியினதும் பாடங்களும் படிப்பினைகளும் ஒடுக்கப்படும் தமிழ்தேசிய இனத்திற்கும் ஏனைய தேசிய இனங்கட்கும் அவசியமானவை. தமிழ்த் தேசியமானது மீண்டும் மீண்டும் பேரினவாதத் ஒடுக்குமுறையைச் சரியான தளத்தில் நின்று எதிர்க்க முடியாதிருப்பதன் அடிப்படை, அது தமிழர் பழமைவாதத்தில் வேர்பிடித்துநிற்பதேயாகும். அதிலிருந்து விடுபடாதவரை, தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தமிழ்த் தேசிய இனத்திற்குத் வெறும் வாய்பேச்சுத் தலைமையை மட்டுமே அளிக்க முடியுமன்றி, எவ்

வகையிலும் விடுதலையை பெற உதவமுடியாது. 1966 ஒக்றோபர் எழுச்சியானது தாழ்த்தப்பட்ட மக்கள் தனித்துநின்று போராடும் வழிமுறையை காட்டவில்லை. உயர்த்தப்பட்டோர் எனப்பட்ட மக்கள் மத்தியில் இருந்த நல்லெண்ணங் கொண்டோர், ஜனநாயகவாதிகள், முற்போக்காளர்கள், இடதுசாரிகள் ஆகியோரோடு இணைந்து நின்று வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாலேயே அன்றைய போராட்டங்கள் வெற்றி பெற்றன.

தமிழ்த் தேசியவாதிகள் தொடர்ந்தும் இந்த வரலாற்று அனுபவ உண்மையைக் கற்க மறுப்பதுடன் வரலாற்றில் அதை மறைக்கவும் முற்படுகிறார்கள். அதற்குக் காரணம், இன்றும் அவர்களிடம் இறுகிய நிலையில் இருந்து வரும் பழமைவாதக் கருத்தியலேயாகும். வர்க்க ஒடுக்கலையும் சாதியத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் தகர்க்க விரும்பாத தமிழ்த் தேசியத்தைக் கேள்விக்குட்படுத்தாதோ அதனைத் தாண்டிச் செல்லாதோ எத்தகைய போராட்டத்தாலும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வென்றெடுக்க முடியாது. அதேபோன்று சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு தீனி போடும் வகையிலன்றிச் சிங்கள உழைக்கும் மக்களிடம் சென்றடையக்கூடிய நியாயமான கொள்கைகளையும் வழிமுறைகளையும் முன்னெடுப்பதன் மூலமே தமிழ் மக்களின் விடுதலையை நோக்கி செல்லமுடியும். இன்றைய தமிழர் ஆதிக்க அரசியற் தலைமைகளைத் தவிர்த்து உழைக்கும் தமிழ் மக்களின் தலைமையிலான நான்காவது கட்டப் போராட்டம் ஒன்றினைத் தோற்றுவிப்பதே இன்றைய தேவையாகும். அது பரந்துபட்ட தமிழ் மக்களை அணிதிரட்டிய வெகுஜனப் போராட்டமாகவே இருக்க முடியும் அதனைவிட வேறு மார்க்கம் எதுவும் தமிழ் மக்கள் முன்னால் இல்லை.

*****

# புரட்சியின் காலகட்டங்களும் புதிய ஜனநாயகப் புரட்சியும்

*- மோகன் -*

## புரட்சியின் காலகட்டங்கட்கான நியாயம்

இறுதியிற் கம்யூனிச உலகாக அமையவுள்ள சோஷலிச உலகு தவிர்ந்த இறுதி இலக்கெதுவும் மாக்ஸியர்கட்கு இருக்கவியலாது. மாக்ஸியர்கள் சோஷலிசமெனக் கருதுவதற்கும் சமூக ஜனநாயகவாதி களும் பிற சீர்திருத்தவாதிகளும் சோஷலிசமெனச் சொல்கிறவைக்கும் உள்ளடக்கத்திலும் அணுகுமுறையிலும் தெளிவான வேறுபாடு உண்டு. மாக்ஸியர்கள் வேண்டும் சோஷலிச சமுதாயம் முதலாளிய சமூக உருவாக்கங்களிலிருந்து தோன்றலாம். அரைப்-பிரபுத்துவ, அரைக்-கொலனிய சமூக உருவாக்கங்களிலிருந்தோ கொலனிய முதலாளியத் திணிப்பின் விளைவான பிற பலவீனமான முதலாளிய சமூக உருவாக்கங்களிலிருந்தோ கூட அது தோன்றலாம்.

சோஷலிசத்துக்கும் அதன் இறுதி வடிவான கம்யூனிசத்துக்கும் இடையிலான வேறுபாடு, கம்யூனிசத்தின் வருகை வரையான நீண்ட காலத்தில் அரசு என்பது உதிர்விற்கு உட்படும் என்ற புரிதலுடன் தொடர்புடையது. கம்யூனிச மாற்றத்தை வழிநடத்தப் போவதான பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின் கீழ் அரசு ஒன்று தேவைப் படும். முதலாளியத்தைத் தூக்கியெறிந்த பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமே சோஷலிச அரசு எனப்படுகிறது. முதலாளிய விருத்தியின் தவிர்க்கவியலாத ஒரு இயல்பு, சமூகங்களின் முதலாளிய மாற்றத்திலும் தொழில் விருத்தியிலும் உள்ள ஒருசீரின்மையாகும். அதனாற் கம்யூனிச மாற்றத்திற்கு ஒரு நீண்ட காலம் தேவையாகிறது. இத் தொடர்பிலேயே, சோஷலிசத்துக்கான பாதையின் காலகட்டங்கள் அல்லது புரட்சியின் காலகட்டங்கள் பற்றிய கேள்விகளும்,

அவற்றையொட்டி, ஒரு நாட்டில் சோஷலிசம் பற்றிய கேள்வியும் எழுகின்றன.

பல 'இலட்சியவாதிகளும்' 'இடது தீவிரவாதிகளும்' ட்ரெட்ஸ்கி வாதிகளும் புரட்சியின் காலகட்டங்களையும் ஒரு நாட்டில் சோஷலிசத்தின் சாத்தியத்தையும் மறுத்துள்ளனர். ஒரு நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியெழுப்புவதை மறுப்பதன் மூலம், உலகப் புரட்சியின்றி சோஷலிசத்தைக் கட்டியெழுப்ப இயலாது என்று ட்ரெட்ஸ்கிவாதிகள் சுட்டுகின்றனர். முதலாளிய உலக ஒழுங்கைப் பற்றிய யதார்த்தமற்ற பார்வையும் லெனினுக்கும் ஸ்ற்றாலினுக்கும் மாறாக ட்ரெட்ஸ்கி சொன்னவை எப்போதுமே சரியானவை என நிறுவும் தணியாத் தாபமும், அவற்றுடன் சேர்ந்து, ஸ்ற்றாலின் மீதான வெறித்தனமான எதிர்ப்புமே இந்த நிலைப்பாட்டின் ஆதாரங்கள்.

உலகளாவிய முறையில் முதலாளிய மாற்றம் ஒருசீரற்றது என்பதால், சோஷலிசத்துக்கான பாதையும், கட்டாயமாக, முதலாளிய விருத்தி மட்டத்துக்கும் நிலவுகிற உலக நிலைமைக்கும் அமைய வேறுபடும் என்பது ஒக்ற்றோபர் புரட்சிக்குப் பிந்திய வரலாற்று அனுபவமாகும். அதைவிடப், புரட்சி செய்யவும் சோஷலிசத்தைக் கட்டியெழுப்பவும் எந்த ஒரு நாட்டு மக்களும் பின்பற்றுவதற்கான திட்டவட்டமான மாதிரியுரு எதுவும் இல்லை என்றும் நடைமுறை காட்டியுள்ளது.

புரட்சிகள் தோற்றுள்ளன; சோஷலிச அரசாங்கங்கள் வீழ்ந்துள்ளன. அது ஒரு நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியெழுப்பும் கொள்கையின் உள்ளாரர்ந்த குறைபாட்டாலல்ல. மாறாக, சோஷலிச சமுதாயத்தின் அக முரண்பாடுகளைச் சரியாகக் கையாளாமையாலும் முதலாளியம் தூக்கியெறியப்பட்ட பின்பும் வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் தொடரக்கூடிய வழிகளை உணரத் தவறியமையாலுமே அவ்வாறு நிகழ்ந்தது. நமது பணி ஏதெனின், கடந்தகாலத் தவறுகளினின்று கற்று சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதாகும்.

நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு சர்வதேச இடதுசாரி அமைப்போ பரந்துபட்ட ஆனாற் தெளிவான வேலைத்திட்டத்தைக் கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமோ இருப்பது ஏந்தவொரு நாட்டிலும் புரட்சிக்கு உதவும். பற்றுறுதியுடைய ஏகாதிபத்திய விரோத அல்லது,

அதினும் விரும்பத்தக்கதாக, இடதுசாரி அரசாங்கங்களைக் கொண்ட ஒரு முற்போக்கு முகாம் இருப்பின் அது மேலும் உதவியாயிருக்கும். அப்படியானவை தாமாக வந்தமையா. அவை சர்வதேச அளவிற் தளராத போராட்டத்தின் மூலமே வருவன.

ஏகாதிபத்திய வடிவில் முதலாளியம் உலகின் மீது ஆதிக்கம் செலுத்திவந்துள்ளது என்ற யதார்த்தத்தையும் உலகப் புரட்சி கண்ணுக்கெட்டுந் தொலைவில் இல்லை என்ற யதார்த்தத்தையும் மீறி, முதலில் ரஷ்யாவிலும் பின்னர் சீனா உட்பட்ட பிற நாடுகளிலும் புரட்சிகள் நிகழ்ந்தன. அப் புரட்சிகள் பாட்டாளி வர்க்கத் தலைமைக் கீழ் சோஷலிச உற்பத்திமுறையைச் செயற்படுத்தும் பணியைப் பொறுப்பேற்றன. அப் பணியின் முழுமைப்படுத்தல், உலகின் பிற பகுதிகளில் நடந்தவற்றிற் தங்கியிருந்தமை உண்மையே. எனினும், அப் பொருளாதாரங்கள் நகர்ந்த திசை பற்றி ஐயத்துக்கு இடமில்லை. போராற் சீரழிந்த ஜேர்மனியின் பகுதியான கிழக்கு ஜேர்மனியை விட்டால், சோஷலிசத்தை நிறுவவிருந்த நாடெதுவும் முன்னேறிய தொழிற்துறையைக் கொண்ட முன்னாள் முதலாளிய வல்லரசல்ல. புரட்சியின் பின்பு சோவியத் ஒன்றியமாகிய ரஷ்யாவிலும் பின்பு சீனாவிலும் நடந்த புரட்சிகள், முறையே, வலிய பிரபுத்துவ எச்சங்களைக் கொண்ட பின்தங்கிய முதலாளியப் பொருளாதாரம் ஒன்றிற்கும் முதலாளிய வல்லரசுகளின் நெடுங்கால ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு அரைப் பிரபுத்துவப் பொருளாதாரம் ஒன்றிற்கும் வாரிசுகளாகின. சோவியத் ஒன்றியத்தின் பொருளாதாரத்தை நவீனப்படுத்தவும் விவசாயத் துறையில் சோஷலிச உற்பத்தி உறவுகளைப் புகுத்தவுமான முயற்சிகள் பின்னிடைவுகளைக் கண்ட போது, லெனினின் தலைமைக் கீழ், சோஷலிச மூலோபாயம் “புதிய பொருளாதாரக் கொள்கையாக” மாற்றியமைக்கப்பட்டது. அவ்வாறான ஒரு அனுசரிப்பு இல்லாமற் புரட்சி தப்பிருக்காது.

## புரட்சியின் காலகட்டங்கள்

புரட்சியின் காலகட்டங்கள் எனும்போது, மாக்ஸியர்கள், உற்பத்திச் சக்திகளதும் உற்பத்தி உறவுகளதும் இயல்புகட்கமைய முழு நாட்டிலும் அல்லது அதன் பகுதிகளில் புரட்சியின் பணிகளைக் காலப்

பிரிப்புக்கு உட்படுத்துவதையே கருதுகின்றனர். முழுமையாகத் தொழில்மயப்பட்ட முதலாளியப் பொருளாதாரமாக விருத்திபெறாத ஒரு பொருளாதாரத்தை மாற்ற நடவடிக்கை எடுக்குமுன், கள நிலவரங்கள் பற்றிய மதிப்பீடு அவசியம்.

எவ்விடத்தும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த, மக்கள் ஜனநாயகம் ஒன்றை நிறுவுவது அவசியம். ஒரு நாட்டிற் குறிப்பிடத்தக்க முதலாளிய ஜனநாயகம் இருக்குமாயின் மக்கள் ஜனநாயகத்துக்கு மாறுவது சிக்கலற்றது. முதலாளிய ஜனநாயகம் இல்லாதபோது அல்லது, பல முன்னாட் கொலனிகளின் விடயத்திற் போன்று, மிகக் குறைபாடாயிருக்கும் போது, மக்கள் ஜனநாயகத்தை நிறுவுமுன், நிறைவுறாதுள்ள ஜனநாயக அரச நிருவாக அம்சங்களைக் கவனிக்கவேண்டி நேருகிறது. நிறைவேற்றற்குரிய பணிகளிற் பல முதலாளிய ஜனநாயகத்துக்குரியன என்பதாற் புரட்சியும் முதலாளிய ஜனநாயகப் புரட்சியாக அமைய வேண்டியதில்லை. பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றன் நோக்கம் முதலாளிய ஜனநாயகத்தின் பெயரில் முதலாளிய ஆட்சியை நிறுவுவதல்ல.

## புதிய ஜனநாயகம்

பின்தங்கிய தொழிற் துறையையும் பிரபுத்துவச் சமூக உறவுகளையும் கொண்ட ஒரு நாட்டில் மக்கள் ஜனநாயகத்தை நோக்கி நகர்வதன் சங்கடத்தை மனத்திற்கொண்டே புதிய ஜனநாயகம் என்ற கருத்தாக்கம் சீனாவில் அறிமுகமானது. முற்றாகத் தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் இயங்கும் மக்கள் ஜனநாயகத்தைப் போலன்றிப் புதிய ஜனநாயகம், முற்போக்கான —அல்லது முற்போக்காக அமையக்கூடிய— வர்க்கங்களின் நேச அணியின் மீது தங்கியுள்ளது. இங்கு, தலைமை தொழிலாளி வர்க்கத்தினதாகவும் வழிநடத்தல் தொழிலாளி வர்க்கச் சித்தாந்தத்தினதாகவும் இருப்பது முக்கியமானது. அதன்மூலம், அது, அத்தியாவசிய முதலாளிய ஜனநாயகப் பணிகளை நிறைவேற்றி அங்கிருந்து மக்கள் ஜனநாயகத்தை நோக்கி முன்னேறும் மூலோபாயமாகிறது.

சீனாவிலே வர்க்கங்களின் நேச அணி தொழிலாளர்களையும் ஏழை, நிலமற்ற, நடுத்தர வியசாயிகளையும் சிறு முதலாளிகளையும் தேசிய

முதலாளிகளையும் கொண்டிருந்தது. தெளிவாகவே, அதன் நோக்கம் ஏகாதிபத்தியத்தையும் அதன் நெருங்கிய கூட்டாளிகளான போர்ப் பிரபுக்களையும் தரகு முதலாளிகளையும் பெரும் நிலப்பிரபுக்களையும் தனிமைப்படுத்துவதாகும். ஜனநாயக மாற்றம் என்பது இவ்விரு தரப்பினர்க்குமிடையிலான பிரிகோடகவும் இருந்தது. எவ்வாறாயினும், ஜனநாயக மாற்றம் முதலாளிய ஜனநாயக இலக்குக்கட்கு மட்டும் வரையறைப்பட்டிருந்தாற் புரட்சியாற் தனது மக்கள் ஜனநாயக இலக்குக்களையும் சோஸலிசப் பொருளாதாரத்தையும் நோக்கி முன்னேற இயலாது. எனவே, புதிய ஜனநாயகம் என்பது, ஒரு இடைக்கால நிலையே ஒழிய இறுதி இலக்கல்ல. எனினும் அதில்லாது புரட்சியால் ஒடுக்குமுறையாளர்களான சிறுபாலோருக்கு எதிராகப் பெரும்பாலோரை ஐக்கியப்படுத்த இயலாது. அதே வேளை, அதைக் கடந்து செல்லத் தயங்குவது, வரையறைக்குட்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புடைய முதலாளி வர்க்கத்திடம் மண்டியிடுவதாகும்.

பல்வேறு காரணங்களால், புதிய ஜனநாயகப் புரட்சிக்கான நியாயம் மூன்றாம் உலகு முழுவதிலும் உள்ளது. அதை அவசியமாக்குவன எவையெனின், முதலாளிய ஜனநாயகப் பணிகள் நிறைவுபெறாமையும் இருக்கக்கூடிய முதலாளிய ஜனநாயக வடிவங்கள் தொடர்ந்து ஏகாதிபத்திய மிரட்டலுக்கு உட்பட்டிருப்பதுமாகும். முன்னாள் ஆசிய, ஆபிரிக்கக் கொலனிகளின் முதலாளிய ஜனநாயகம், முதலாளிய ஜனநாயகப் புரட்சி மூலம் நிறுவப்படாமல் கொலனிய வல்லரசுகளால் அவற்றின் தேவைகட்கமையத் திணிக்கப்பட்டமை அங்கு முதலாளிய ஜனநாயகப் பணிகள் நிறைவுபெறாமைக்கு ஒரு வலிய காரணாகும். மேட்டுக்குடியினரே ஆட்சியில் தொடர்வதற்கமையக் கையாளக்கூடிய வாக்கு வங்கிகள் என்பதே மக்களுக்கு விதிக்கப்பட்ட வகிபாகமானது. அதற்கப்பால் பாராளுமன்ற ஜனநாயகம் மக்களை அடையவில்லை.

ஒரு நூற்றாண்டு முன்னர், பல லத்தின் அமெரிக்க நாடுகளில், ஒரு புரட்சிகர இயக்கமோ சுதந்திரப் போராட்டமோ ஏதோ வகையான தேர்தல் ஜனநாயகத்தை ஏற்படுத்தியபோதும், ஏகாதிபத்தியவாதிகளும் பெரும் நிலச் சொந்தக்காரர்களும் ஒத்துழைத்து ஜனநாயகத்துக்கு ஒழுங்குமுறையாகக் குழிபறித்தனர். அதற்குப் பின்தங்கிய அரசியலும் மந்தமான தொழில் விருத்தியும் உதவின. நாடுகளின் பொருளாதாரங்கள் பெருமளவும் பண்ணைத் தொழிலிலும் கனிமச்

சுரங்கங்களிலும் தங்கியிருந்ததால் முதலாளிய உற்பத்தி உறவிற்குப் பதிலாகப் பிரபுத்துவத் தன்மையான உற்பத்தி உறவுகளே நிலவின.

பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் இல்லாத இடங்களிலும், பிரபுத்துவச் சிந்தனையின் ஆதிக்கம் இருப்பதும் பல சமயங்களில் ஏகாதிபத்திய ஆதரவுடன் ஒரு ஆதிக்கத் தேசிய இனத்தின் தேசிய ஒடுக்குமுறை தொடர்வதும் கணிசமான தொழில் விருத்தி இருந்தும் ஏகாதிபத்திய நெறிப்படுத்தலால் விகாரப்பட்ட பொருளாதாரமும் ஜனநாயக மாற்றத்தைத் தடுத்துள்ளன. எனவே மக்கள் ஜனநாயகத்தை அடையு முன்பு, புரட்சி ஒரு இடைக்கால நிலையூடு செல்லவேண்டியுள்ளது.

புதிய ஜனநாயகத்துக்கு ஒருசீரான நெறிமுறைகளையோ தரப்படுத்தப்பட்ட வகைமாதிரியையோ நாடுவது வரட்டுத்தனமாகும். புதிய ஜனநாயகப் புரட்சியின் பணிகளும் மக்கள் ஜனநாயக மாற்றத்துக்கான கால அளவும் சூழலுக்கமைய வேறுபடும். நாடுகட்கிடையில் மட்டுமன்றி, ஒரு நாட்டின் வெவ்வேறு சமூகங்கட்கு இடையிலும் —உதாரணமாகச் சீனாவின் பிற பகுதிகளை விட மந்தமான வேகத்திலேயே திபெத்தில் கூட்டு உடைமையை நோக்கிய நகர்வு நிகழ்ந்தமை போன்று— வேறுபாடான அணுகுமுறைகள் தேவைப்படும். இவ்வாறு புதிய ஜனநாயகப் புரட்சியின் பணிகளை ஒரு நாட்டின் ஒரு சமூகத்தினுள்ளோ பிரதேசத்தினுள்ளோ, அது எந்த அளவுக்கு மாற்றத்துக்கு ஆயத்தமாயுள்ளது என்பதைப் பொறுத்து, காலப் பிரிப்புக்கு உட்படுத்தும் தேவை வரலாம்.

தொகுத்துக் கூறுவதாயின், புதிய ஜனநாயகம் என்பது, பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு ஏகாதிபத்திய விரோத ஐக்கிய முன்னணி தனது புரட்சியின் வெற்றியைக் கெட்டிப்படுத்திச், சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதன் மூலமும் பிரபுத்துவத்தின் எச்சங்கள் அனைத்திற்கும் முடிவுகட்டுவதன் மூலமும் மக்கள் ஜனநாயகத்தின் கீழ் சோஷலிச மாற்றத்துக்கு ஆயத்தப்படுத்துவதைக் குறிக்கும்.

*****

# இந்திய அமெரிக்க உறவும் சீன மிரட்டலும்

## *இலங்கை மீதான பூரண ஆதிக்கத்துக்கான போட்டி யாருக்கிடையிலானது?*

- *அஸ்வத்தாமா* -

இன்று தென்னாசியாவின் மீது பூரண ஆதிக்கம் செலுத்துவது யார் என்ற போட்டி வலுப்படுகிறது. அதில் பூகோள மற்றும் மூலோபாய ரீதயில் இலங்கை மீதான பூரண ஆதிக்கத்துக்கான போட்டி முக்கிய இடத்தில் உள்ளது. இப் பின்னணியில் ஒருபுறம் சீன மிரட்டல் பற்றிய எச்சரிக்கைகள் விடப்படுகிறன. மறுபுறம் அமெரிக்காவைத் தமிழருக்காகப் பயன்படுத்துவது பற்றியும் இந்தியாவை நம்ப வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசப்படுகிறது. இன்று, இலங்கை மீதான பூரண கட்டுப்பாட்டுக்கான போட்டி அடிப்படையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலானதே. சீன மிரட்டல் அதற்கு வசதியாகப் பாவிக்கப்படுகிறது.

தமிழ்ப் பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளை எழுதும் சில ஆய்வறிவாளர்களும் புலனாய்வாளர்களும் இலங்கை மெதுமெதுவாக சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது என்றும் இலங்கை மீதான ஆதிக்கப் போட்டி அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலானது என்றும் எழுதுவதோடு, இந்தியாவின் பங்கை அடக்கி வாசிக்கிறார்கள். இது புதிதல்ல. ஆனால் உண்மையில் இலங்கை மீதான பூரண ஆதிக்கத்தை வேண்டி நிற்பவர்கள் யார் என்ற கேள்விக்கு நிகழ் நிலைகளின் அடிப்படையிலும் ஆராய்வின் அடிப்படையிலும் விடை தேடுவது நல்லது. நாம் விளங்க வேண்டிய உண்மைகளைத் திரிப்பின்றிச் சொல்வது காலத்தின் தேவை. தமிழ்ப் பத்திரிகைள் சீன விரோதப் போக்கிற் சொல்லியுள்ள உண்மைகளை விடச் சொல்லாது விட்ட உண்மைகள் அதிகம். இலங்கையில் நடந்து முடிந்த போருக்கு ஆயுதங்களை வழங்கித் தமிழர்களைக் கொன்றொழித்தது சீனாதான் என்று தொடர்ந்தும் எழுதப்படுகிறது. இலங்கை அரசுக்கு ஆயுதங் களையும் தொழில்நுட்பங்களையும் செய்மதிவழியாகத் தகவல்களை

யும் முன்னின்று வழங்கிய நாடுகள் அமெரிக்காவும் இந்தியாவுமே ஒழியச் சீனாவல்ல. தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாச் சொல்லப்பட்ட விடுதலைப் புலிகளைத் தடைசெய்த நாடுகளில் சீனா ஒன்றல்ல.

இன்று இலங்கை-சீன உறவு நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையிலான வர்த்தக அடிப்படையிலானது. சீனா இதுவரை எந்த நாட்டின் மீதும் மேலாதிக்கஞ் செலுத்தவில்லை. சீனா சோஷலிச நாடாக இருந்த போது வகுத்த அயற் கொள்கையில் இதுவரை எந்த மாற்றமும் இல்லை. இனி மாறுமா என்பது வேறு விடயம். சீனா இதுவரை இலங்கையின் உள் அலுவல்களிற் தலையிடவில்லை. அவ்வாறே அது இதுவரை வேறெந்த நாட்டின் உள் அலுவல்களிலும் தலையிடவில்லை. இந்தியாவும் அமெரிக்காவும் அவ்வாறல்ல.

இலங்கையில் ராணுவ மேலாதிக்கத்திற்காகஇந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிற் பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ள போட்டி இப்போதும் தொடர்கிறது. கொலனியத்தின் இறுதிச் சுவடுகள் போன பின்பு இலங்கை மண்ணில் அடிபதித்த படைகள் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் அல்லாமல் வேறெந்த நாட்டினவையும் அல்ல. 1971ல் நேரடிக் குறுக்கீட்டுக்கு ஆயத்தமாய் இருந்த இந்தியப் படைகள், 1987ல் நேரடியாகக் குறுக்கிட்டன.

இந்தியா இலங்கையின் உள் அலுவல்களிற் குறுக்கிடுவதற்குச் சீன மிரட்டல் காரணமாக இருக்கவில்லை. அது இப்போது ஒரு வசதியாக்கப்பட்டுள்ளதே ஒழிய உண்மைக் காரணங்கள் வேறு. இலங்கையின் அணிசேராக் கொள்கை முழுமையானதாக இருப்பதை இந்தியா விரும்பவில்லை. இந்தியத் தரப்பிலேயே இலங்கை நிற்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு முரணாக 1962 வரை எதுவும் நடக்கவில்லை. எனினும் 1961இல் இந்திய-சீன எல்லை மோதலின் போதும் 1971இல் இந்திய-பாக்கிஸ்தான் மோதலின் போதும் இலங்கை வகித்த நடுநிலையை இந்தியா வெறுத்தது. குறிப்பாக, மேற்குப் பாக்கிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்கு (இன்று பங்களாதேஷ்) பாக்கிஸ்தான் விமானங்கள் இலங்கையில் எரிபொருள் நிரப்ப நின்று போனதை இந்தியா வெறுத்தது. எனினும் ஒரு நேச நாடு தனது ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தனது படைகளைக் கொண்டுசெல்ல உதவுவது இந்திய-பாகிஸ்தான் முரண்பாட்டில் ஒரு பக்கஞ் சார்வதாகி விடாது. எனினும், இந்திய மேலாதிக்க நோக்கில் அந்த நியாயம் விளங்கியிராது. எவ்வாறாயினும், இலங்கையின் உள் அலுவல்களிற் தலையிடுவதில்

இந்தியா எச்சரிக்கையுடனேயே இருந்து வந்தது. ஆனாலுந் தமிழ்த் தேசியவாதிகள் இந்திய அதிருப்தியைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இருந்தனர். இந்தியா இலங்கையிற் குறுக்கிடுவதற்கான சூழ்நிலை தமிழர் மீதான அக்கறையாலல்லாது ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சி அமெரிக்காவின் சார்பான திசையில் அயற் கொள்கையை நகர்த்திய போது ஏற்பட்டது.

1987இல் இந்தியா இலங்கைத் தமிழருக்குச் செய்த துரோகத்திற்கு எந்தச் சீனத் தலையீடு காரணமாயிருந்தது என்று இதுவரை யாருஞ் சொல்லவில்லை. ஏனெனிற், சீனா 1952 முதல் இலங்கையுடன் பேணி வந்த நட்புறவு, 1957இல் ராஜதந்திர உறவுகள் ஏற்பட்ட பின்பு மேலும் வலுப்பட்டது. 1970களில் சீனா ஏகாதிபத்திய விரோத கொலனிய விரோத விடுதலைப் போராட்டங்களை வலுப்படுத்துமுகமாகச் சில ஆபிரிக்க நாடுகட்குப் பெரிய பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளது. அவை சீன மேலாதிக்க நோக்கிலானவை எனக் குற்றஞ்சாட்ட யாருக்கும் இயலவில்லை.

சீனாவின் அயற் கொள்கையிற் சர்வதேச நிகழ்வுகளும் போக்குக்களும் முக்கிய பங்களித்துள்ளன. சீனாவுக்கு எப்போதுமே அமெரிக்கா பற்றிய ஒரு எச்சரிக்கை உணர்வு இருந்துள்ளது. 1961க்குப் பிறகு தொடங்கிய சோவியத் ஒன்றியத்துடனான முரண்பாடு, 1967இல் சோவியத் ஒன்றியம் செக்கோஸ்லவாக்கியாவுக்குப் படைகளை அனுப்பியதிலிருந்து வலுப்பெற்றது. சோவியத் ஒன்றியத்தில் பிரெஷ்னெவ் ஆட்சிக் காலம் முழுவதும் சீன-சோவியத் உறவில் முறுகல் இருந்து வந்தது. 1980களில் தொடங்கிய நெகிழ்வு சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்பு, சீனாவின் அரசியல் மாற்றங்களின் விளைவாகவும் ரஷ்யாவில் அமெரிக்காவின் ஆதிக்க முனைப்பு கடும் எதிர்ப்பைக் கண்டதன் பயனாகவும், ஒரு புதிய வலிய உறவு ஏற்பட்டுள்ளது.

இவ்விடத்தில் இந்திய அமெரிக்க உறவின் பரிணாமங்களைப் பார்ப்பது அவசியம். இந்தியா சுதந்திரமடைந்தது முதல் 1990 வரை,இந்திய-அமெரிக்க உறவுகளைத் தீர்மானிக்கும் சக்தியாக இந்திய-சோவியத் உறவுகள் அமைந்திருந்தன. குறிப்பாகக், கெடுபிடிப் போர் உச்சத்தில் இருந்த காலத்தில் இந்திய-அமெரிக்க உறவு மிக மட்டுப்படுத்தப்பட்டு —ஆனாற் பகைமையற்று— இருந்தது. நேரு அணிசேராக் கொள்கையை இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையாக கொண்டிருந்ததனால் கெடுபிடிப்போர்க் காலத்தில் ஒருவகையான

இரட்டறு நிலையை இந்தியா கொண்டிருந்தது. இந்திய-பாகிஸ்தான் போரின் போது அமெரிக்கா பாகிஸ்தானுக்கே ஆதரவு தெரிவித்தது. அதேவேளை, இந்தியாவின் கைத்தொழிற்றுறை வளர்ச்சியிலும் ஆயுத விற்பனையிலும் சோவியத் ஒன்றியம் முக்கிய பங்காளியாக இருந்தது. இக் காலத்தில், இந்தியாவைத் தனது சந்தையாக மட்டுமே பார்த்த அமெரிக்கா இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்கை வழங்கவில்லை.

சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்னர் இந்திய-அமெரிக்க உறவு முன்னேறிது. அமெரிக்கா உலகப் பொலிஸ்காரரானாகியதன் விளைவாக இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை நாடியது. 1997இல் பொக்ரானில் இந்தியாவின் அணுகுண்டுச் சோதனை இந்திய-அமெரிக்க உறவில் விரிசலை உண்டாக்கியது. அமெரிக்கா இந்தியாவிற்கெதிரான பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஆனால் இந்தியாவின் தொழில்நுட்ப, கைத்தொழில் வளர்சிகளின் பின்னணியில் பொருளாதாரத் தடை பாரிய பாதிப்பை விளைக்கவில்லை. எனவே, 2001இல் அமெரிக்கா இந்தியா மீதானான பொருளாதாரத் தடையை நீக்கியது.

“9/11”ஐத் தொடர்ந்து அமெரிக்கா முன்னெடுத்த “பயங்கரவாதத்திற்கெதிரான போரில்” இந்தியா அமெரிக்காவின் பங்காளியாகிய பின்பு இந்திய-அமெரிக்க உறவு சுமுகமாகியது.

2004ம் ஆண்டு கைச்சாத்திட்ட அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தம் இந்திய-அமெரிக்க உறவில் ஒரு புதிய பரிமாணமாகும். அணு ஆயுத வலிமையுடைய நாடுகளை ஓப்பந்தங்களினூடு தனது கட்டுப்பாட்டின் கீழக் கொண்டுவரும் அமெரிகத் திட்டத்தில் இந்தியா பங்காளியானதுடன் தனது அணுசக்தித் திட்டத்தை சர்வதேச அணுசக்தி முகவராண்மையம் (IAEA) மேற்பார்வையிட இந்தியா அனுமதித்தது. அடிப்படையில் இது இந்தியாவின் இறைமைக்கு சவால்விடுவதாக இருந்தும் ஆட்சியாளர்களின் ‘அமெரிக்க விசுவாசம்’ அதை இயலுமாக்கியது.

இன்று, இந்திய-அமெரிக்க உறவின் முக்கியமான அம்சமாகப் அமெரிக்க-இந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு விளங்குகிறது. அதை இயலுமாக்கிய ஒரே காரணி, ‘சீன மிரட்டல்’ எனப்படும் —சீனாவை அண்டிய பிராந்தியத்திலும் உலகளாவிய முறையிலும்— சீனாவின் தவிர்க்கவியலாத வகிபாகமாகும். சீனாவின் வளர்ச்சியும் அதன்

இராணுவ பலமும் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியச் செல்வாக்குக்குச் சவாலாகத் தெரியும் அதே வேளை, உலகளாவிய முறையில் அமெரிக்காவின் பேரரசுக் கனவுக்கு அச்சுறுத்தலாய் விளங்குகிறது. இந்த அடிப்படையில், சீனாவைப் பொது எதிரியாகக் கொள்ளுமாறு இந்திய-அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைகிறது. குறிப்பிடத்தக்கவாறு, அண்மை வரை, அமெரிக்கா தனது அதிநவீன ஆயதங்களை இந்தியாவுக்கு விற்கவில்லை. இன்றும் இந்தியாவுக்கு ஆயதம் வழங்கும் முன்னணி நாடுகளாக ரஷ்யாவும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுமே விளங்குகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, அவை நம்பகமான ஆயத விற்பனையாளர்களாக இன்னமும் உள்ளன. அமெரிக்க ஆயதங்களின் கூடிய விலையும் தொடர்ச்சியான விநியோகம் பற்றிய ஐயங்களும் அமெரிக்க ஆயதக் கொள்வனவில் இந்தியத் தயக்கத்துக்கான காரணங்களாகும். இந்த நிலை அண்மைக்காலமாக மாறி வருகிறது.

இந்திய-அமெரிக்க உறவின் நெருக்கத்தையும் தன்மையையும் தொடர்ந்தும் நிர்ணயிக்கும் காரணியாகப் பாகிஸ்தான்-அமெரிக்க உறவு உள்ளது. தென்னாசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தானைக் கெண்டு அமெரிக்கா தான் விரும்பியவற்றையெல்லாம் சாதிக்க இயலுமான வரை, இந்திய-அமெரிக்க உறவு வலுவற்றறே இருக்கும். பாகிஸ்தான் அமெரிக்காவின் தாளத்திற்கு ஆட மறுப்பின், அமெரிக்கா இந்தியாவுடன் நெருங்கும். இவ்வாறு, இந்திய உதவியோடு அமெரிக்கா தனது தேவையை நிறைவுசெய்வதோடு பாகிஸ்தானின் மீது மறைமுக அழுத்தத்தையும் கொடுக்கிறது.

தனது ஆப்கானிய யுத்தத்தைத் தொடர அமெரிக்காவிற்கு இந்தியாவின் பங்களிப்புத் தேவை. 2010 முதல் தொடர்ந்து நடைபெறும் இந்திய-அமெரிக்க மூலோபாய உரையாடல்களின் (Strategic Dialogue) அடிப்படையாக ஆப்கானிஸ்தானில் இந்தியாவை ஈடுபடுத்துவது அமைகிறது. 2014இல் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து முற்றாக விலகுகையில் அமெரிக்கா வகித்துவந்த பங்கை இந்தியா வகிப்பதை அமெரிக்கா வேண்டுகிறது. அமெரிக்க பாதுகாப்புச் செயலரின் சொற்களில், “ஆப்கானிஸ்தான் இனி எங்களது பிரச்சனையல்ல உங்களது பிரச்சனை”. அதாவது, அமெரிக்காவின் அடியாளாக இந்தியா செயற்படவேண்டும்.

அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கை முடிவுகளில் தாக்கமுடைய Foreign Policy இதழ் வாஷிங்டன் டில்லியிடம் எதிர்பார்க்கும் 10 அம்சங்களைப் பட்டியலிட்டிருந்தது.

1. சீனாவுடன் சண்டைக்குத் தயாராயிருத்தல்
2. இந்து சமுத்திரத்தில் சில்லறைச் சண்டையிடல்
3. ஆப்கானிஸ்தானின் மாற்றத்தில் உதவுதல்
4. ஈரானுக்கு அழுத்தங் கொடுத்தல்
5. ‘நல்ல’ (அதாவது அமெரிக்க சார்பான) நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கல்
6. தென்கிழக்காசிய அலுவல்களிற் பங்குவகித்தல்
7. பாகிஸ்தானுடன் தொடர்ந்து முரண்படல்
8. பொருளாதார ஒப்பந்தங்களிற் கைச்சாத்திடல்
9. தொடர்ச்சியான இராணுவக் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளல்
10. அமெரிக்காவிடம் ஆயதம் வாங்குதல்

தென்னாசியப் பூகோள அரசியலில் இந்திய-அமெரிக்க உறவென்பது இரு நாடுகளுக்குமிடையிலான போட்டியை மையப்படுத்துகிறது. இன்று இலங்கை, நேபாளம், மாலே ஆகிய நாடுகளில்இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மேலாதிக்கப் போட்டி உள்ளது. நேபாளத்தில் தொடரும் அமெரிக்கா-இந்திய சதுரங்கமும் மாலே ஆட்சிக் கவிழ்ப்பில் இந்தியப் பங்கும் கவிழ்க்கப்பட்டவருக்கு அமெரிக்க ஆதரவும் இந்திய-அமெரிக்க போட்டிக்கான அண்மைய உதாரணங்கள்.

சீனாவும் ரஷ்யாவும் வேகமாக வலுவடையும் நிலையில் ஆசியப் பிராந்தியத்தில் ஒரு ‘ஆசிய நேட்டோ’வை உருவாக்க அமெரிக்க விழைகிறது. இதில் முக்கிய பங்காற்ற இந்தியா அழைக்கப்படினும், உருவாகவுள்ள கூட்டமைப்பு இந்தியாவையும் அச்சுறுத்தும். ஒரு வரியிற் சொல்வதானால், இந்திய-அமெரிக்க உறவைக் ‘கசந்தும் கசக்காத உறவின் அடிப்படையிலான போட்டி’ எனலாம்.

அமெரிக்கா உலகின் மிகப் பெரிய ராணுவ வல்லரசாக உள்ளது. அதன் ராணுவத் தளங்கள் அமெரிக்க எல்லைகட்கப்பால் வெகு தொலைவிற் பலவேறு நாடுகளில் உள்ளன. இப்போது அதன் கூட்டாளியாகி விட்ட இந்திய மேலாதிக்கம் தன் அயல்நாடுகளின் உள் அலுவல்களிற் தீவிரமாகக் குறுக்கிடுகிறது. இக் குறுக்கீடுகள்

மூலம், இந்திய மேலாதிக்கத்தின் ஒரு கரமாக சார்க் அமைப்பு மாற்றப்படுகிறது. இவற்றை மூடி மறைக்கவே, சீன மிரட்டல் என்பதைச் சிலர் முன்னெடுக்கின்றனர். இங்கு கவனிக்கத் தக்கது என்னவென்றால் இந்திய அரசாங்கமோ அமெரிக்காவோ குற்றஞ் சாட்டும் விதமாகச் சீனா இதுவரை எந்த நாட்டின் உள் அலுவலிலுங் குறுக்கிட்டதில்லை. சீனாவின் "முத்து மாலை" எனப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியத் துறைமுகங்களின் விருத்திக்கான சீன உதவி பற்றி முற்குறிப்பிட்ட விஷமிகளை விட வேறு எவரும் —குறிப்பாக எந்த நாட்டின் அரசாங்கமும்— விமர்சிக்கவுமில்லை, ராணுவ நோக்கங் கற்பிக்கவும் இல்லை. அதற்கான வாய்ப்பும் ஆதாரங்களும் இருந்திருந்தால் இந்தியாவும் அமெரிக்காவும் அதைப்பற்றி வெளிவெளியாகப் பேசத் தயங்கியிரா.

சீனா, இதுவரை, தனது பொருளாதாரச் செல்வாக்கை வலுப் படுத்துவதிலேயே முக்கிய கவனங் காட்டி வந்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்திற் தன் கடல்வழிப் பாதை எதையும் மறிக்க அமெரிக்கா முற்பட்டாற் தனது கப்பல்கட்குத் துறைமுகங்களும் கடல் வழிகளும் பண்டங்களைக் கொண்டு செல்லத் தரை வழிகளும் தேவை என்கிற அடிப்படையிலேயே சீனா இப் பிராந்தியத்தின் சில நாடுகளிற் துறைமுகங்களை விருத்தி செய்ய உதவுகிறது. அதன் மூலம் தனது கப்பல்களின் துறைமுக வசதிகட்கு ஒரு உத்தரவாதத்தைப் பெற முயலுகிறது. இவற்றில் எந்தத் துறைமுகந் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நாட்டை வற்புறுத்துமாறான உடன் படிக்கை எதுவும் இல்லாததோடு எந்தத் துறைமுகத்தையும் சீனக் கடற்படைத் தளமாகப் பயன்படுத்துவதற்கான எந்தச் சாடையும் இல்லை. அம்பாந்தோட்டைத் துறைமுக விருத்திக்காகச் சீனா இலங்கைக்கு வழங்குகிற கடனும் அதை நிர்மாணிக்கும் பணியும் முற்றிலும் வணிக அடிப்படையிலானவை.

சீனா இலங்கையின் பொருளாதார விருத்திக்கு உதவுவது பற்றிப் பேசுவோர், இலங்கையிற் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளைப் பற்றிப் பேசுவதில்லை. சம்பூரில் இந்தியா நிறுவவுள்ள அனல் மின் நிலையம், மோதல்கள் வலுப்பெற்று இலங்கை ராணும் சம்பூரைப் பிடித்தவுடனேயே அங்கீகரிக்கப் பட்டது. அத்துடன் அப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகவும் அறிவிக்கப்பட்டது. வடமேற்குப் பகுதியில் எண்ணெய் அகழ்வுக்கு இந்தியாவுடனான உடன்படிக்கையை

எதிர்க்காமல் சீனாவுடனான உடன்படிக்கைகளை மட்டும் எதிர்ப்போரது நோக்கங்கள் கவனத்துக்குரியன.

தன்னுடைய கடற் பகுதி எல்லைத் தகராறுகளைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதே சீனாவின் நிலைப்பாடாகத் தொடருகிறது. இதுவரை தனது எல்லைப்புற நாடு எதன் மீதும் மேலாதிக்கஞ் செலுத்தாத நாடாக நவ சீனா இருந்துள்ளது. ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோராம் முதல் மியான்மார் வரையிலான கடற் பிராந்திய நாடுகளிற் துறைமுகங்களின் அபிவிருத்திக்குச் சீனா உதவி வந்துள்ளமைக்கு நோக்கங்கள் உள்ளன. அவற்றைச் சீன மேலாதிக்கமென்று மொட்டையாக முடிவு காணாமற், சாத்தியமான ஒவ்வொரு காரணத்தையும் ஆராய்வது பயனுள்ளது. சீனாவின் ஏற்றுமதிப் பொருளாதார வளர்ச்சியால் எண்ணெய் முதலாகப் பல்வேறு மூல வளங்களதும் இறக்குமதிக்குத் தேவை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் சீனாவைச் சூழ வலுப்பட்டு வருகின்றன. சிலகாலம் முன்பு சீனக் கடற் பகுதியில் அமெரிக்க இராணுவக் கப்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து சீனக் கடற் படையாற் தடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டது. அமெரிக்கா பிற நாடுகளின் கடற் பிரதேசங்களை என்றும் மதிப்பதில்லை. இவையே சீனாவின் செயற்பாடுகளின் பின்னணியிலுள்ளன.

அமெரிக்கா உலகளாவிய முறையில் ஒவ்வொரு மூன்றாமுலக நாடுகட்கும் மிரட்டலாக உள்ளதா என்பதையும் அது உலகின் பலவேறு பகுதிகளிலும் தனது படைகளை நீண்ட காலத்திற்கோ குறுகிய காலத்திற்கோ தொடர்ந்தும் நிலைநிறுத்தி வருகிறதா என்பதையும் தென்னாசியாவின் சிறிய நாடுகட்கு இந்தியா ஒரு பெரிய மிரட்டலாக வளர்ந்து வந்துள்ளதா என்பதையும் முதலில் விசாரித்து, அவற்றின் அடிப்படையிற் சீனாவின் நடத்தையை விளங்கி விமர்சிப்பது பொருத்தமாயிருக்கும்.

சீனாவை நம்புவதாலோ நம்பாததாலோ தமிழரின் உரிமைகட்கும் விடுதலைக்குமான போராட்டங்கட்குப் பெரும் பாதிப்பு இராது. ஆனால் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் குறுக்கீடுகளின் இயல்பு வேறு. அவற்றை நம்புவதா விடுவதா என்பதற்கு நடைமுறை முக்கியத்துவம் உண்டு. தமிழ் மக்கள் தம்மையே நம்புவது பாதுகாப்பானது.

*****

# மனித இருப்பும் மனித அடையாளமும்

## சி. சிவசேகரம்

### அறிமுகம்

மனித இருப்பை உறுதிசெய்ய வல்லதும் மனிதருக்குத் தேவையானதுமான ஒரே அடையாளம் மனித அடையாளமாகும். பிற அடையாளங்கள் அனைத்தும் இரண்டாம் பட்சமானவை.

இயற்கையின் அடிப்படையில் அமைந்த முக்கியமான அடையாளம் பால் அடையாளமாகும். வழமையானவை என்று கூறக் கூடிய அடையாளங்களுக்குமப்பால் மனித உடலமைப்பிலும் உள்ளத்தின் தன்மையிலும் வழமை எனக் கூறப்படுபவற்றிலிருந்து பிறழ்ந்த பண்புகளையுடைய மனிதரின் பிறப்புக்கும் இயற்கை இடமளிக்கின்றது. அவ் வேறுபாடுகளிற் சில சிறப்பான ஆற்றல்களையும், வேறு சில குறைபாடுகளையும், பிற வழமையானவற்றிலிருந்து வேறுபட்ட முனைப்புகளையும் சுட்டலாம்.

இவ்வாறே கூர்ப்படைந்த மனித இனத்தின் வாழிடம் உட்பட்ட புறச் சூழல்களும் மரபணு மாற்றங்களும் மனிதரது தோற்றத்திலும் ஆற்றல்களிலும் வேறுபாடுகட்கு வழி செய்துள்ளன. இவ்வாறான அடையாள வேறுபாடுகள் இன அடையாளங்களாகக் கொள்ளப்பட்ட போதிலும், அவை ஒரே உயிரினத்துக்கு உட்பட்டனவாயும் தம்மிடையே கலப்பிற்கு இடமளிப்பனவாயும் அமைந்திருந்தன. அதன் பயனாக மனித இனம் தோற்றத்தில் வேறுபாடுடைய பல்வேறு இனப்பிரிவுகளைக் கொண்டதாக விருத்தி பெற்றது, இவற்றில் எதுவுமே மனிதர் சேர்ந்து வாழ்வதற்கு தடையாய் இருந்ததாகக் கொள்ளமுடியாது.

மனிதரிடையே தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகவும் மோதல்கள் இருந்து வந்துள்ளன. மனிதர் எப்போதுமே போரை விரும்புவோர்

என்பதால் அவை நிகழவில்லை. தமது இருப்பு மிரட்டலுக்குட்படும் போது தனிமனிதரும் மனிதக் குழுக்களும் பிறருடன் மோத நேருகிறது. அவ்விதமான ஆதிநிலைக் குழுக்களிடமிருந்து நாம் இன்று வெகுதூரம் வந்து விட்டோம். இன்று எந்த மனிதரதும் மனிதக் குழுவினரதும் இருப்பிற்குப் பிற மனிதரை அழிக்கும் தேவை உள்ளதாகக் கூற இயலாது. ஆயினும், மனித இனம், கடந்த நூற்றாண்டினுள், கொடிய போர்களை அதிகரிக்கும் அளவிற் கண்டுள்ளது. மனிதரை மனிதர் அழித்தற்கான பேரழிவு ஆயுதங்கள், கொடுமையிலும் ஆற்றலிலும் தொகையிலும் பெருகி வந்துள்ளன. மனித உற்பத்தியின் கணிசமான பகுதி வேண்டுமென்றே மனித இனத்தை அழிப்பதற்குப் பயன்படுகிறது.

பொருளாதார விருத்தியின் பேரிலும் மனிதரது தேவைகள் எனப்படுகின்றவற்றின் பேரிலும் மனிதர் தமது சுற்றாடலுக்கும் அதில் வாழும் பிற உயிரிகட்கும் ஈற்றில் மனித இனத்திற்கும் செய்கின்ற கேடுகளைத் தவிர்த்து, மனிதரை மனிதர் அழிப்பதற்காக வேண்டுமென்றே மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கவனத்திற் கொண்டால், அடையாளம் என்பது மனிதரைப் பிரித்து வைப்பதுடன் மனிதருடன் மனிதர் மோதி அழிவதற்கான முதன்மைக் காரணமாக அமைவதைக் காணலாம்.

## பெரும் அடையாளங்கள்

இயற்கையின் பாற்பட்ட அடையாளங்களுள் மனிதரிடையே தோற்றத்திலும் உடலமைப்பிலும் வேறுபட்ட மனிதக் குழுக்களின் அடையாளம் முக்கியமானது. எனினும் எந்த மனிதக் குழுவும் தூய தனி இனம் என்று சொல்ல இயலாதவாறு இன்று இனப் பிரிவுகளிடையே கலப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிறத்தின் அடிப்படையிலான வேறுபாடு, அடிமை வியாபார மூலமும் கொத்தடிமை முறையிலும் மனிதர் புலம்பெயர்க்கப்பட்ட காலத்தில் இருந்து தொடருகிறது. ஏற்றத்தாழ்வான ஒரு சமூக அமைப்பும் அதைப் பேணும் உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளும் மட்டுமன்றிச் சமுதாயத்தில் ஊறிப்போயிருந்த ஆதிக்கச் சிந்தனைகட்கு உரிய சமூக அமைப்பும் நீங்கிய பின்னும், மனித சிந்தனையில் நிற வேறுபாடு நிலைத்துள்ளது. இன்றைய அடையாளஞ் சார்ந்த முரண்பாடுகளில் நிறமும் நிறஞ்சார்ந்த இன அடையாளமும் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகிக்கின்றன எனலாம். ஆயினும் அவை

தொடர்வதற்கான பிரதான சமூக அடிப்படை நிறமல்ல என்பதையும் இன்று உலகளாவியதாக விரிந்துள்ள ஏகாதிபத்திய முதலாளிய அரசியல் பொருளாதார முறையே என்பதையும் நாம் உணரவேண்டும்.

மனித சமுதாயம் என்பது, சிறு சிறு சமுதாயப் பிரிவுகளாகவே தனது அன்றாட இருப்பைக் கொண்டு இருந்து வந்துள்ளது. எனினும் மனிதத் தேவைகளும் அவை சார்ந்த உற்பத்தியும் நுகர்வும் விரிந்து வந்தமையையொட்டிச் சமூகப் பிரிவுகளிடையே உறவாடல்கட்கான தேவை வளர்ந்தது. அதே வேளை, ஒரே சமூகப் பிரிவு வளர்ந்து பெரும் நிலப்பரப்பொன்றிற் பரவி வாழ்ந்த நிலைமைகளில் அச் சமூகத்தில் மேலும் கிளைகள் உருவாகவும் சில கிளைகளிடையே உறவே இல்லாமற் போகவும் வாய்ப்புண்டு. மொழிகளின் விருத்தியை நோக்குவோமானால் சமூகங்களிடையிலான உறவின் தன்மையும் நெருக்கமும் பொது மொழியொன்றின் உருவாக்கத்திற்கு வழி செய்துள்ளமையையும், அதே வேளை, பொது மொழி ஒன்றிற்கான தேவையின்றி ஒவ்வொரு கிளை மொழியும் தனித்துவமான ஒரு விருத்தியையும் இருப்பையும் பேணுவதனையுங் காணுவோம்.

**மொழி** என்பது முக்கியமான ஒரு சமூக அடையாளமாக இருந்து வந்துள்ளது. அதன் காரணம் விளங்கக் கடினமானதல்ல. எந்தவொரு சமுதாயத்தினதும் அக உறவாடல்களில் மொழியின் பங்கு முதன்மையானது. சமுதாய விருத்திப் போக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளின் பயன்பாடு வெவ்வேறு துறைகள் சார்ந்தேனும் இருந்துவரக் கண்டிருக்கிறோம். எவர்க்கும் எந்த மொழி முதன்மையானதாக உள்ளதென்பதைச் சமூகத்தில் அவரது நிலையும் பங்களிப்பும் தீர்மானிக்கக் கூடும். எவ்வாறாயினும் ஒரு தேசம் அல்லது ஒரு தேசிய இனம் என்பதை அடையாளப்படுத்துவதில் ஒரு மொழிக்கு பிற மொழிகளினுங் கூடிய முக்கியம் இருப்பதைப் பொதுவாகக் காணலாம். அதே வேளை, பல மொழிகளோ மொழிப்பிரிவுகளோ சமமான முக்கியத்துடன் ஒரு சமூகத்திற் பகிரப்படுவதும் உண்டு. இதனை, நகர் சார்ந்த சில சமூகங்களில் மட்டுமன்றிப் பழங்குடிச் சமூகப்பிரிவுகள் ஒரு பொதுமையை நோக்கி நகரும் போதும் காண இயலும்.

**மதம்** எப்போதுமே சமூகங்களின் ஆதிக்கச் சிந்தனையாய் இருந்ததாகக் கூற முடியாது. மனிதரின் அன்றாட வாழ்விலும் பண்பாட்டிலும் மத நம்பிக்கைகளும் மதஞ்சார்ந்த சடங்குகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டுள்ளன. முதலாளியத்தின்

எழுச்சியை ஒட்டி மதங்களின் முக்கியம் குறையுஞ் சாத்தியப்பாடுகள் இருந்த போதும், மதத்தை ஒரு அடையாளமாக வலியுறுத்தச் சமூக வாழ்வில் மதம் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகிறது என்பது முக்கியமல்ல. ஒரு மதத் தீவிரக் கொள்கையை வலியுறுத்துகிறவர் அம் மதத்தை முறையாகப் பின்பற்றுபவராக இருக்கத் தேவையில்லை என்பதை நாம் காண இயலும். எனினும், ஒருவரின் அன்றாட வாழ்வுடன் குறிப்பிடத்தக்க உறவே இன்றி மதம் என்பது அவரது சமூக அடையாளமாக அமையலாம். சில சூழ்நிலைகளிற் பண்பாடு உட்பட பிற அடையாளங்களின் கூறுகளின் துணையுடன் மதம் ஒரு தேசிய இன அடையாளமாகவும் அமையலாம்.

**சாதி** என்பது குறிப்பாகத் தென்னாசியாவின் நிலவுடமைச் சமூகத்தின் வர்க்க அடையாளத்தின் நீட்சியாகவுள்ளது. நிலவுடையச் சமுதாய உற்பத்தியுறவுகள் தொடர்ந்த சூழல்களில் அது வலுவான ஒரு வர்க்க அடையாளமாக இருந்தது. நிலவுடமை உற்பத்தி உறவுகள் பெருமளவும் தளர்ந்தோ அழிந்தோ போன பிறகும் நிலவுடமைச் சிந்தனையின் நீட்சியாகச் சாதியச் சிந்தனைகள் நிலைக்கின்றன. அகமண முறையின் மூலம் நிலைபெற்று வந்த சாதி அடையாளங்கள் இன்னமும் நகரச் சூழல்களில் அகமண முறையின் தொடர்ச்சி மூலம் பேணப்படுவதை நாம் காணுகிறோம்.

**பண்பாடு** என்பது முற்குறிப்பிட்ட அடையாளங்கள் அனைத்தையும் விட வேகமாக மாறுவதாகும். எனினும் பண்பாட்டை முன்னிறுத்திச் சமூகங்களின் தனித்துவத்தையும் அடையாளச் சிறப்பையும் வலியுறுத்துவோர் தமது பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனிக்க விரும்புவதில்லை. மனிதரின் சமூக இருப்பிற்கும் நடைமுறைக்கும் முக்கியமற்ற பண்பாட்டுக் கூறுகளை எவரும் மிகையாக வலியுறுத்தல் பண்பாட்டைப் பேணும் நோக்கின்றி அடையாளத்தை வலியுறுத்தும் நோக்கிலேயே என்பதை நாம் அவதானிக்கலாம்.

சமூக உற்பத்தி முறையும் உற்பத்தி உறவுகளும் மாறுகையிற் பண்பாடு எவ்வளவு மாறுகிறது என்பதைப், பண்பாட்டை மேலைத்தேய-கீழைத்தேய என்று பிரித்துப் பேசுவோர் தவறவிடுகின்றனர். இன்று நாம் மேலைத்தேயப் பண்பாடு என்பது முதலாளியத்தின் விளைபொருளாகும். நகர் சார்ந்த பழைய கிரேக்கச் சிந்தனையின் தொடர்ச்சியான பண்பாடாக அதைக் கொள்ள இயலாது என்பதுடன் ஐரோப்பிய நிலவுடமைச் சமூகத்தினின்று உருப்பெற்ற முதலாளியப்

பண்பாடு, பின்னைய முதலாளிய விருத்தியையொட்டி மேலும் பாரிய மாற்றங்கட்குள்ளாகி வந்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக்குரியன என மெச்சப்படும் பல பண்பாட்டுக் கூறுகளின் வேர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியிலிருந்து வந்தவையே. எனவே சீனப் பண்பாடென்பதும் பிற ஆசியப் பண்பாடுகளெனக் கூறப்படுவனவும் ஒவ்வொன்றும் தனித்துவமான ஒரு பண்பாட்டிலிருந்து உருவானவை என்பதை விடப் பல்வேறு பண்பாடுகளின் தாக்கத்தால் உருவானவை என்பது கூடப் பொருந்தும்.

எனவே மனிதர் தம்முடைய தனித்துவமான அடையாளங்கள் என்று கூறித் தம்முட் பிளவுபட்டுப் போரிடுமளவிற்குத் தூண்டும் அடையாளங்களில் எதுவும் தூயதுமல்ல, முற்றிலும் தனித்துவமானதும் அல்ல. அடையாளங்களின் பல்வேறு கூறுகளின் சேர்க்கையில் தனித்துவம் இருக்கலாமே ஒழிய, ஒவ்வொரு அடையாளக் கூறும் பிற அடையாளங்கட்குரிய பலருடன் பகிரப்படுவது என நாம் காணலாம்.

மனிதரை இன்று அதிகம் பிளவுபடுத்தியுள்ள அடையாளங்களில் மதமும் தேசியமும் முக்கியமானவை. மதங்களின் பேரால் மக்கள் மோதும் வேளையில், எல்லா மதங்களும் ஒன்றையே போதிக்கின்றன என மதத் தலைவர்கள் எனப்படுவோர் சொல்லத் தவறுவதில்லை. அதைவிடப் பொய்யான கூற்றுக்கள் அதிகம் இருக்கமுடியாது. ஏனெனில் மாதங்கடகுப் பொதுவானவை என்று கூறக்கூடிய எதுவும் இருப்பின், அது, மனித நேயத்திற்குள் அல்லது மனிதரின் சமுதாய இருப்பிற்குத் தேவையான அற ஒழுக்க விதிகட்குள் அடங்கும். எனவே அவ்வாறான பொதுப் பண்புகளைப் பேண மதங்கள் தேவையில்லை. மனிதர் மதங்களை நாடுவது அவ்வாறானதொரு தேவை கருதியும் அல்ல. அல்லல் மிக்க வாழ்வில் அல்லல்களின் காரணங்களைக் கண்டறிந்து தீர்க்க வழிகாட்டுதற்கு மாறாக மனிதர்க்கு ஆறுதல் கூறுவதுடன் தற்காலிகமான மனநிம்மதியை மதம் வழங்குகிறது. எனவே வாழ்க்கை அல்லல்மிக்கதாக உள்ளவும் தனிப்பட்ட முறையிற் பலருக்கு மதம் எனும் பற்றுக்கோடு தேவைப்படுகிறது.

ஆனால் தனிமனித நம்பிக்கை என்ற எல்லையைத் தாண்டி மனிதரை வேறுபடுத்திப் பிரிக்கும் அடையாளமாக அது வலியுறுத்தப்படும் போது, அது ஆபத்தான சக்தியாகிறது. இவ்விடத்து அரசியற்படுத்தப்பட்ட மதங்களும் அவற்றின் தீவிர வடிவங்களும் சமூகக்கேடானவையாகின்றன. எந்தவொரு மதத்தையும் அவ்வாறான

நிலைக்குத் தள்ள இயலும் என்பதை நாம் அண்மையிற் கண்டுள்ளோம்.

**தேசியம்** என்பது மனிதரின் இயல்பான இருப்புக்குரிய ஒரு அடையாளமல்ல. தேசம் என்ற கருத்தாக்கம் வரலாற்றில் மிக அண்மையானது. அரசு என்பதையும் நாடு என்பதையும் தேசம் என அடையாளப்படுத்தல் முதலாளியத்திற்குத் தேவைப்பட்டது. அதன் பயனாகப் பல தேசிய இன அடையாளங்கள் அழிக்கப்பட்டன. முக்கியமாகப், பல மொழிகள் வழக்கொழிந்தன அல்லது வழக்கொழிக்கப்பட்டன. இவ்வாறான வழக்கொழிப்புப் பண்பாட்டையும் பாதித்துள்ளது. மனிதக் குழுக்களின் அடையாளங்களின் சிதைவு முதலாளியத்தின் தேச எல்லைக்குள் நில்லாது அதற்கு வெளியிலும் நடந்துள்ளதை நாம் அறிவோம்.

எனவே தேசியம் என்பது வெறுமனே குறிப்பிட்ட ஒரு சமூக-அரசியல்-பொருளாதாரக் கட்டமைப்பைப் பேணுவதற்கும் அப்பால் பிற தேசங்களை ஆதிக்கத்துக்குட்படுத்தவும் அழிக்கவும் முற்படுவதை நாம் காணுகின்றோம். தேசத்தினதும் தேசத்தின் நலன்களினதும் பாதுகாப்பினதும் பெயராற் கொடிய போர்கள் நடத்தப்படுகின்றன. உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசியத்தின் பேராற் தம்முட் போரிடும் விதமாக இன்று தேசியம் என்பது பின்தங்கிய முதலாளிய உற்பத்தியுடைய நாடுகளைப் பிளவுபடுத்தவும் பயன்படுகிறது. எனினும் இத் தேசங்களினதும் தேசிய இனங்களதும் மோதல்கள் பெரு முதலாளியத்திற்கு மட்டுமே நன்மை பயக்கின்றன. உண்மையில் இப் போர்களுக்குப் பின்னல் உள்ள ஊக்குவிப்பாளர்கள் பன்னாட்டுக் கம்பனிகளாக இருப்பதும் அவர்களுக்கும் அவர்களுடைய மூலதனத்திற்கும் இப் போர்களால் ஒரு தேசம் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கன. அவர்கள் வலிய தேச அரசுககளுடன் தம்மை அடையாளப்படுத்தி வலிமை குறைந்த தேச அரசுகளையும் தேசங்களையும் தேசிய இனங்களையும் பிரித்தும் பிளவுபடுத்தியும் போரில் ஆழ்த்தியும் தேவையானபோது அவற்றின் மீது போர் தொடுத்தும் அடக்கியாள முற்படுகின்றனர்.

## சிறு அடையாளங்கள்

இவை மனித சமூகம் ஒன்றின் முழுமைக்கோ அதன் ஒரு தனித்துவமான சமூக-பொருளாதார-பண்பாட்டுக் கூறாக இயங்கக்

கூடிய ஒரு பகுதிக்கோ உரிய அடையாளங்களுக்குட் காணப்படும் இயற்கையின் பிறழ்வுகள் எனப்படுவற்றையும் தனிமனிதத் தெரிவுகளையும் சார்ந்த சிறுபான்மை அடையாளங்களை இவ்வாறு கூறலாம். இவ்வாறான அடையாளமுடையோரைச் சிலர் விளிம்பு நிலை மாந்தர் என்பர். எனினும் இங்கு கருதப்படும் அடையாளங்கள் ஒவ்வொன்றும் மனிதரை விளிம்பு நிலையில் வைத்திருப்பதாகக் கூறுவது கடினம். எவ்வாறாயினும் இவ்வாறான அடையாளங்களால் மனிதர் பாரபட்சங்களுக்கு உட்பட இடமுண்டு என்பது உண்மை.

சுயபாற்காமம் என்பதைக் குற்றமாகக் கருதித் தண்டித்த பல நாடுகளில் இன்று அது ஏற்கப்பட்டுள்ள போதும், சமூகத்தில் உள்ள மனத்தடைகள் காரணமான பாரபட்சம் தொடர்வதை நாம் காணுகிறோம்.

உடலமைப்பிலும் உளவியலிலும் வேறுபாடு உடையோருடன் சமூகம் பொதுவாகப் பகைமையுடனேயே நடக்கின்றது. வலது குறைந்தவர்களுடன் தனிப்பட்ட முறையில் உறவையோ நட்பையோ கருதி மனிதர் பரிவுடனும் மரியாதையுடனும் நடந்தாலும் அவர்கட்குச் சமவாய்ப்பளிக்க எல்லாச் சமூகங்களும் முன்வருவதில்லை. அவர்கட்கான சலுகைகள் உள்ள இடங்களிலும் சமத்துவம் உள்ளதா என்ற கேள்வியுள்ளது. முடவர், செவிடர், குருடர், பைத்தியகாரர் போன்ற சொற்களைத் தவிர்ப்பது நல்ல நோக்கமுடையதாயினும் உடல், உளக் குறைபாடுகள் பற்றிய மனத்தடைகளை நீக்கப் பேர் மாற்றம் போதாது.

இடதுகைப் பழக்கமுடையோரும் எல்லாச் சமூகங்களிலும் சமமாக நடத்தப்படுவதில்லை. பொதுப் பாவனைக்கான கருவிகள் முதல், கதவுகள் வரையிலான பலவும் வலது கைப் பழக்கக்காரருக்கானவை என்பதை நாம் பொதுவாகக் கவனிப்பதில்லை. மேற்குறிப்பிட்ட உடல் உள நிலை தொடர்பான சிறுபான்மை அடையாளங்கள் போகச், சமூக நிர்ப்பந்தங்கள் உருவாக்கும் விதவை, பரத்தை, சில்லறைத் திருடர் போன்றோர், குறிப்பாகப் பின்தங்கிய சமூகங்களில், மிகவுங் கேவலமாகக் கருதவும் நடத்தவும் படுவதை நாம் அறிவோம். இன்று பெருந்தொகையான முதியோரும் இவ் வகைக்குள்ளடங்குவர். பெரும் அடையாளங்களின் பேரிற் சமூகப் பிரிவினராக ஒன்றுபட்டுப் போராடக் கூடிய அளவிற்கு சிறு அடையாளங்களின் அடிப்படையில் போராடல் இயலாவிடினும் சமூக விழிப்புணர்வு கூடுதலாக உளள சூழல்களில் அவர்களாற் தமது உரிமைகட்காகப் போராட முடிகிறது. எனினும்,

அடிப்படையான சமூக மாற்றம் என வரும் போதும் பிற நியாயமான போராட்டங்களின் போதும் அவர்களுடைய தேவைகளைக் கணிப்பில் எடுப்பதன் மூலம் உரிமைப் போராட்டங்கள் வலிமை பெறுகின்றன என்பது கவனத்திற்குரியது.

## மனித இருப்பிற்கான போராட்டம்

மனித குலத்தின் நலமானதும் நிலையானதுமான இருப்பு, மனித சமுதாயம் நீதியானதாயும் சமத்துவமானதாயும் அமையும் போதே இயலும். அடையாள வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வாயும் அடக்கலையும் நசுக்கலையும், சுரண்டலையும் உள்ளடக்கியும் உள்ளளவும் அடையாள அடிப்படையிலான பகைமை தவிர்க்க இயலாதது.

எனவே, ஒரு அதிகார வர்க்கத்தின் நிலைப்பிற்காகப் பல மனிதரைச் சில மனிதர் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமூகத்தின் உற்பத்தி உறவுகள் பகையானவை. வர்க்க முரண்பாடு, மனித இருப்பின் அடிப்படை முரண்பாடாகவும் பகை முரண்பாடாகவும் இருந்து வருகிறது. அவ்வாறான சுரண்டல் அமைப்பின் நீடிப்பிற்காக முதலாளியம் பிற சமூக முரண்பாடுகளைத் தனக்கேற்பப் பயன்படுத்தி வந்துள்ளது. குறிப்பாக, முதலாளியம், நவீன ஏகாதிபத்தியமாகி உலக மயமாக்கல் என்ற பேரில் உலகு முழுவதையும் சில பெரு முதலாளியக் குழுக்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்காக தேசிய, மத, இன அடையாளங்கள் ஆகிய யாவற்றையும் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்துகிறது.

அத்துடன், ஏகாதிபத்தியம், பின்நவீனத்துவத்தின் மூலமும் அதன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டு வரும் புதிய கோட்பாடுகள் மூலமும் சிறு அடையாளங்கள் எனப்படுபவனவற்றை மிகைப்பட வலியுறுத்திப் பெரிய பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்பவும் முனைகிறது. இன்று நவகொலனிய முறை மூலம் ஏகாதிபத்தியம் பின்தங்கிய முதலாளிய நாடுகளின் அரசுகளைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் மக்களின் எழுச்சிகளைக் கட்டுப்படுத்துவது போக, என்.ஜி.ஒக்கள் எனப்படும் “தன்னார்வக்” குழுக்கள் மூலமும் மக்களின் ஐக்கியப்பட்ட எழுச்சிக்குக் குழி பறிக்கிறது.

இந் நிலையில் மக்களின் நலன் மீதும் மானிட நிலைப்பின் மீதும் நலமான இருப்பின் மீதும் அக்கறையுடையோர் செய்யக்கூடியது என்ன?

அடிப்படையான முரண்பாட்டை விட மற்றவற்றை மாயை என்று புறக்கணிக்க இயலுமா?

அடிப்படையான முரண்பாடான வர்க்க முரண்பாடு தீர்ந்தாற் பிற யாவும் தாமாகத் தீருமென ஆறுதல் கூற இயலுமா?

மேற்கண்டவாறான அக்கறையின்மை மனிதரிடையே அடையாளஞ் சார்ந்த பகையும் அதன் விளைவான மோதல்களும் வலுப்பதற்கே உதவும். எனவே ஆண்-பெண் வேறுபாடு தவிர்ந்த சகல அடையாள வேறுபாடுகளும் மனித இனத்திற்குத் தேவையற்றவை என்பதை உணர்வதுடன், ஆண்-பெண் வேறுபாடு பாகுபாட்டுக்கும் ஆண்களின் மேலாதிக்கத்திற்கும் வழி செய்தல் மானுட நலனுக்குக் கேடானது என்பதை ஏற்பதும் முக்கியமானது.

எனவே, எந்த அடையாள அடிப்படையிலான முரண்பாட்டையுஞ் சுமுகமாகத் தீர்க்கக் கூடியவாறு அதை நீதி நியாயத்தின் அடிப்படையிற் கையாளுந் தேவை நமக்கு உண்டு. நீதி நியாயங்கள் மறுக்கப்படும் போது நிகழும் போராட்டங்கள் சரியானவை என்பதுடன் நீதிக்கான பிற போராட்டங்களுடன் ஒவ்வொன்றும் உறவு படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படுவதும் மனித இனத்தின் இருப்பிற்கு அவசியமானது.

மனித அடையாள வேறுபாடுகள் தம்மளவிற் கேடானவையல்ல. அவை நட்பான முரண்பாடுகளாக அமையுமாறு கவனித்துக் கொள்வது எவ்வாறு என்பது தான் மனித இனத்தை எதிர்நோக்கும் பெரிய சவாலாகும்.

*****

# பண்பாடு

*ச. சுதாகர்*

அன்னையின் மடியினில் பாலினைக் குடிக்கையில்
ஊட்டி வளர்த்ததப் பண்பாடு
தந்தையின் தோளில் ஆடி வளர்கையில் ஊட்டி வளர்த்ததப் பண்பாடு

பகைமையைப் பாழ்மையை சாதியத் தீமையை
பகர்ந்து வளர்த்ததப் பண்பாடு
அடிமையின் மோகத்தை ஆழ்ந்து நம் மனத்தில்
ஆக்கி வைத்ததப் பண்பாடு

அப்பு சாமிக்கு அடங்கிடல் வேணும்
ஐயர் சாமிக்கு படிந்திடல் வேணும்
அடுத்த சாதியை அணைத்திடல் கூடா
அடுத்தவர் நலத்தினில் அக்கறை கூடா

மேட்டிமை சாதியில் பிறந்தவன் உனக்கு
வேற்று சாதியில் காதலும் கூடா

பாட்டன் முப்பாட்டனின் முதுசொம் ஈதென்று முதுகினில் சுமந்த
மூட்டை எம் பண்பாடு

பழைமையின் வேராய் படர்ந்த பண்பாடு
கலாச் சாரத்தை காட்டிக் கவிழ்த்த பண்பாடு
புதுமையின் பெயரால் புகுந்த சிறுமையை
புது அமுதெனவே குடித்த பண்பாடு
புளித்த கள் எனவே புதுமை நாறிட
அதனையும் தன்னுடன் கோர்த்த பண்பாடு

நாளுக்கு நாள் உரு மாறும் பண்பாடு
நமதென உமதென பிரிக்கும் பண்பாடு

நாட்டினில் தாலியால் குடும்பம் பண்பாடு
கரை தாண்டினால் கூட வாழ்தல் பண்பாடு

வெள்ளையன் வருகையில் வெற்று மேலுடல் பண்பாடு
பின்னை நாள் முழு உடல் மூடல் பண்பா டின்று
மூடிய ஆடைகள் குறைதல் பண்பாடு

நாளுக்கு நாள் உரு மாறும் பண்பாடு
நாட்பட்ட பழைமையை சுமக்கும் பண்பாடு
சாதிய தீமையை விதைக்கும் பண்பாடு
பெண்டிரை அடிமையாய் நடத்தும் பண்பாடு
மதத்தினை போதையாய் ஏற்றும் பண்பாடு
மனிதரை பேய்களாஇ ஆக்கும் பண்பாடு

ஆயிரம் ஆண்டினில் ஓடிய வேர்களை தேடனும் நம் தோழா
அதில் விஷமெது வித்தெது அமுதெது என்று தெரியனும் நம் தோழா

விஷ வேர்களை வெட்டி வீணினில் வளர்ந்ததைச்
சாய்க்கனும் நம் தோழா
சாய்ந்த அம் மரத்தையும் வேட்டிய வேரையும்
சுட்டெரிக்கணும் நம் தோழா

சுட்ட சாம்பலின் சுடர்மிக எழுமே புது பண்பாடொன்று நம் தோழா
அது சுடர்ந்திடும் வாழ்வினைச் சூரிய ஒளியினை தந்திடும் நம் தோழா

மனிதரை மனிதராய் மனிதர்கள் மதிக்கும்
வகையினைத் தரும் புதுப் பண்பாடு
பழமைகள் களைந்து புதுமைகள் புகுத்தி புதிதென எழும் புதுப் பண்பாடு

நீயென நான் எனப் பிரிந்தவர் கூடி உயிர்த்தெழுந்திடும்
அது புதுப் பண்பாடு

எமதினி எமதினி உலகென எழுந்து புகழ்மிக
ஓங்கிடும் புதுப் பண்பண்பாடு
புதியதோர் மனிதனை புதியதோர் நீதியை புறப்படச்செய்யுமப் பண்பாடு

மனிதரை மனிதராய் மனிதர்கள் மதிக்கும் வகையினைத்
தரும் புதுப் பண்பாடு

***(31.1.2012 அன்று கொழும்பில் சமூக விஞ்ஞானக் கல்வி வட்டத்தின் "பாடிப்பறை" நிகழ்ச்சித் தொடரின் ஆண்டு நிறைவு நிகழ்வின் கவியரங்கிற் பாடிய கவிதை)***

# செம்பதாகை – 16

Epitaph for a Palestinian Child
by Michael Ray Burch

I lived as best I could, and then I died.
Be careful where you step: the grave is wide

مرثية لطفل فلسطيني

عشت قدر استطاعتي، وبعدها متّ

إحذر أين تخطـّو: فالقبر واسع

*[ஆங்கிலத்திலிருந்து அரபுக்கு: இக்பால் தமிமி (Iqbal Tamimi)]*

ஒரு பலஸ்தீனக் குழந்தைக்கான கல்லறை வாசகம்

***மைக்கல் றே ஜேச்***

என்னால் வாழ இயன்றளவு நன்றாக வாழ்ந்து இறந்தேன்
கவனமாகக் காலடி வையுங்கள்: புதைகுழி அகலமானது

*[ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு: சி. சிவசேகரம்]*

***1958 பெப்ரவரியிற் பிறந்த மைக்கல் றே ஜேச், ரெனஸி (Tennessee) மாநிலத்தில் நாஷ்வில் (Nashville) நகரில் வாழும் ஒரு அமெரிக்கப் படைப்பாளியாவர்.***

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335***
***Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***